ஸ்ரீசைதந்ய [illegible]

உ 4

[illegible], 1959

[illegible]
59.2.4
198713

ஸ்ரீசங்கர க்ருபா

॥ श्रीशंकरकृपा ॥

(மாதப் பத்திரிகை)

சார்வரி
மலர் 3

ஐப்பசி
இதழ் 4

பொருளடக்கம்.

நெ	விஷயம்		பக்கம்
1.	ஸ்ரீ ஜகத்குருபஞ்சகம்	...	1-3
2.	ஸ்ரீ சாரதா புஜங்கம்	...	4-7
3.	ஸ்ரீ ஸ்வயம்வரா பார்வதீ ஸ்தோத்திரம்	...	8-9
4.	ஸ்ரீ ஸத்குரு பாதுகா ஸ்தவராஜம்	...	10-14
5.	சிருங்கேரி ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் உபதேசம்		15-16
6.	ஸ்ரீ ஸத்குருவின் மஹிமை	...	17-21
7.	வேதப்ராமாண்யம்	...	21-23
8.	கீத ஸந்தேசம்-4	...	24-28
9.	கேனோபநிஷத் (நாடகம்)	...	29-35
10.	அபிராமி அந்தாதி	...	36-40
11.	ஸ்ரீ தேவி பாகவதக் கதைகள் (ஹயக்ரீவர்)		41-44
12.	ஸூர்தாஸரின் பக்தியோகம்	...	45-48
13.	வாஸிஷ்ட ஸாரம்	...	49-50
14.	ஸ்ரீ குருகிருபா விலாஸம்	...	127-132
15.	பஞ்சதசீ (பஞ்சபூதவிவேகப்ரகரணம்)	...	25-28
16.	ஆத்மபோதம்	...	79-82
17.	குறிப்புகள் (சென்னை நவராத்ரி வைபவம்)		i-viii
18.	இந்த இதழில்		

வருஷச் சந்தா ரூ. 5 ஆயுள் சந்தா ரூ 100

சந்தாத் தொகையை மானேஜருக்கு அனுப்பவும்.

ஸ்ரீ K. திருமலைஸ்வாமி அய்யர், மானேஜர், "ஸ்ரீ சங்கர க்ருபா"
16, சேஷபுரம், தென்னூர், திருச்சி-1.

ஆசிரியர் :— "குருபக்த ரத்னம்" ஸ்ரீ K. R. வெங்கடராமன்,
8, வரதராஜப்பெருமாள் கோவில் தெரு,
கொத்தவால்சாவடி, திருச்சி-8.

உதவி ஆசிரியர் :— ஸ்ரீ K. S. வெங்கடராம சாஸ்திரி, ஸ்ரீ சங்கர குருகுலம், ஸ்ரீரங்கம், திருச்சி-6.

ஆலோசனைக் குழு :—
பேராசிரியர் ஸ்ரீ க. பஞ்சாபகேசன்
,, ,, M. K. வெங்கடராம ஐயர்
ஸ்ரீ K. சங்கரநாராயணய்யர் (ஓய்வுபெற்ற நீதிபதி)
,, R. ஹரிஹரய்யர் அட்வொகேட், மதுரை.

புதிதாகச் சேர்ந்த ஆயுள் மெம்பர் :—
45. His Highness The Maharaja of Pudukotah

ஸ்ரீ மகா ஸ்வாமிகள் நவராத்ரி தர்பாருக்கு விஜயம் செய்யும் காட்சி
ஸ்ரீ வைத்தியசுப்ரமண்ய அய்யர் அவர்கள் ஸ்ரீ மகா ஸ்வாமிகளை
அழைத்துக்கொண்டு செல்கிறார்கள்.

तेनैव पा

तेनैव पावितं पृथ्वी तेनैव कुलमु

द्धृतं येन रत्नं ओं पदं भोजयेत्

यो यर्पितं मनः ५८॥

इदं मौ अीश्वर स्तोत्रं भाष्यायः

ठति प्रमे श्री चंद्र मौ

श्री: कांचिनिवा प्रण ष्ठं

स्तुति नार

ॐ जं स पालय

मूल ईश्वरं

प्रयत्नं

ओ

— इति सर्व



॥ श्रीशंकरकृपा ॥

ஸ்ரீ சங்கர க்ருபா

"एषा शंकरभारती विजयते निर्वाणसौख्यप्रदा"

மலர் 2] சார்வரி — ஐப்பசி [இதழ் 4

॥ श्रीः ॥

॥ श्रीजगद्गुरुपञ्चकम् ॥

ஸ்ரீ ஜகத்குரு பஞ்சகம்

(ஸ்ரீ ஸச்சிதானந்ததீர்த்த ஸ்வாமிகள்)

हृद्यानवद्यनिजसूक्तिविशेषजालैर्विद्रावितस्वजनहार्दतमःप्ररोहान् ।
विद्याधुनीविहरणोद्यतराजहंसान् विद्यासुतीर्थगुरुराजवरान् नमामः ॥

अज्ञानिनां तिमिरितासु मनोगुहासु विज्ञानदीपकलिकामुपदर्शयन्ती ।
प्रज्ञानिधेः सदुपदेशगवी गुरोर्नः प्रज्ञाप्रकाशमनिशं प्रचुरीकरोतु ॥

लोके मनांसि निजभक्तचकोरकाणामानन्दयन्नमृतवाङ्मयवर्षणेन ।
उद्भासते कुवलयान्तरतापजातसर्वंकषो गुरुमुखेन्दुरसौ प्रसन्नः ॥

शर्म प्रदातुमिह सर्वजनाय लोके धर्मप्रचारसरणिं समुपादिशन्नः ।
विद्यासुतीर्थगुरुसंयमिसार्वभौमो भूमौ चिरायुरधिगत्य चिरं विजीयात् ॥

आसेतोराहिमाद्रेश्च धर्मपालनतत्परः ।
विद्यातीर्थगुरुः सोऽयं वर्धतामुत्तरोत्तरम् ॥

ஹ்ருத்யாநவத்ய நிஜஸூக்தி விசேஷஜாலை:
வித்ராவித ஸ்வஜந ஹார்த தம: ப்ரரோஹான் ।
வித்யாநதீ விஹரணைத்யத ராஜஹம்ஸான்
வித்யாஸுதீர்த்த குருராஜவரான் நமாம: ॥

அக்ஞாநிநாம் திமிரிதாஸு மனோ குஹாஸு
விக்ஞாந தீபகலிகாமுபதர்சயந்தீ ।
ப்ரக்ஞாநிதே: ஸதுபதேச கவீ குரோர்ந:
ப்ரக்ஞா ப்ரகாசமநிசம் ப்ரசுரீகரோது ॥

லோகே மநாம்ஸி நிஜபக்த சகோரகாணா-
மாநந்தயந்நம்ருத வாங்மய வர்ஷணேந ।
உத்பாஸதே குவலயாந்தர தாபஜாத-
ஸர்வங்கஷோ குருமுகேந்துரஸௌ ப்ரஸந்ந: ॥

சர்ம ப்ரதாதுமிஹ ஸர்வஜநாய லோகே
தர்மப்ரசார ஸரணிம் ஸமுபாதிசந் ந: ।
வித்யாஸுதீர்த்த குருஸம்யமி ஸார்வபௌமோ
பூமௌ சிராயுரதிகத்ய சிரம் விஜீயாத் ॥

ஆஸேதோ ராஹிமாத்ரேஶ்ச தர்மபாலந தத்பர: ।
வித்யாதீர்த்த குரு: ஸோயம் வர்ததாமுத்தரோத்தரம் ॥

மனோஹரமானதும் தோஷலேசமில்லாததுமான தன் சிறந்த பல உபதேசங்களால் தன்னை அண்டியவர்களின் மனதிலுள்ள அக்ஞானத்தை விரட்டுபவரும், ராஜஹம்ஸம் நதியில் விளையாடுவதுபோல் "வித்யை" என்னும் நதியில் விளையாடுவதில் ஈடுபட்டவருமான (சாஸ்திர சர்ச்சைகளில் குதூஹலத்துடனும் ருசியுடனும் ஈடுபடுபவர்) ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த குருராஜரை வணங்குகிறோம். (1)

ஞானத்திற்கு இருப்பிடமான நம் ஆசார்யருடைய ஸதுபதேச வசனமானது எப்பொழுதும் ஞான ஒளியை மிகுதியாக்கட்டும். இந்த உபதேசமானது அக்ஞானிகளுடைய இருளடைந்த மனமென்னும் குகைகளில் அறிவு என்னும் தீபத்தை ஏற்றிவைக்கிறது. (2)

உலகில் சரத்காலத்துப் பூர்ணசந்திரன் தன் நிலவைப் பொழிந்து சகோரபக்ஷிகளின் மனதை இன்புறுத்துகிறான்.

இதுபோலவே ப்ரஸன்னமான குருவின் முகம் சகோர பக்ஷிகள் போன்ற தன் பக்தர்களின் மனதை தனது உபதேசாம்ருதவர்ஷத்தால் இன்புறுத்துகிறது. (குருவின் முகமாக உபதேசத்தைக் கேட்டமாத்திரத்தில் எல்லோரும் ஆனந்தமடைகின்றனர்) பூமிக்கும் நீலோத்பல புஷ்பத்திற்கும் பகலில் ஸூரிய கிரணத்தாலேற்பட்ட உள்தாபத்தையெல்லாம் முழுவதும் சந்திரன் போக்கி மலரச்செய்கிறான். இதுபோல குருவின் முகம் பூமியிலுள்ள யாவருடைய மனதின் தாபத்தையெல்லாம் முழுவதும் போக்குகிறது. (குருவின் முகத்தை தர்சித்தமாத்திரத்திலேயே மனதிலுள்ள தாபமெல்லாம் எல்லோருக்கும் நீங்கிவிடுகிறது. (3)

உலகில் எல்லா ஜனங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுப்பதற்காக தர்மம் பரவும் மார்க்கத்தை நமக்கு உபதேசிக்கின்ற யதிசிரேஷ்டரான ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த குரு பூமியில் நீண்ட ஆயுளுடன் வெகுகாலம் ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்கவேண்டும். (4)

ஸேது முதல் இமயமலைவரை எங்கும் தர்மத்தைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த குரு மேன்மேலும் அபிவிருத்தியடையட்டும். (5)

गङ्गा पापं शशी तापं दैन्यं कल्पतरुस्तथा ।
पापं तापं च दैन्यं च घ्नन्ति सन्तो महाशयाः ॥

கங்கை பாபத்தையும், சந்திரன் தாபத்தையும், கல்ப விருக்ஷம் ஏழ்மையையும் போக்குகின்றன. விசால மனமுள்ள ஸாதுக்கள் பாபம், தாபம், ஏழ்மை மூன்றையும் போக்குகின்றனர்.

* * *

किमत्र चित्रं यत्सन्तः परानुग्रहतत्पराः ।
न हि स्वदेहशैत्याय जायन्ते चन्दनद्रुमाः ॥

நல்லோர்கள் பிறருக்கு அநுக்ரஹம் செய்வதிலேயே ஈடுபட்டவர்கள் என்பதில் என்ன அதிசயம்? சந்தணமரம் தன் உடலின் குளிர்ச்சிக்காக உண்டாவதில்லை.

ஸ்ரீ சாரதா புஜங்கம்

(முன் தொடர்ச்சி)

(அ) ஒருக்கால் இப்பொழுது என் அக்ஞானம் விலகாமல் போனாலும், மறுபடியும் பிறவியை அடைந்து இந்த ஸம்ஸாரத்தில் உழலாதபடி என் ஆயுள் முடிவிலாவது அக்ஞானத்தை நீக்கும் உன் ஸ்மரணம் ஏற்படவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறார் :—

यदा दण्डधृत्प्रेषिता भीमदूताः महापापिनं मां समाक्रष्टुमारात् ।
समायान्ति तस्मिन्हि काले दयाब्धे मदीये मनस्याविरेधि त्वमम्ब ॥

யதா தண்டத்ருத் ப்ரேஷிதா பீமதூதா:
மஹாபாபிநம் மாம் ஸமாக்ரஷ்டுமாராத் ।
ஸமாயாந்தி தஸ்மின் ஹி காலே தயாப்தே
மதீயே மனஸ்யாவிரேதி த்வமம்ப ॥

दण्डधृत्प्रेषिताः—யமதர்மராஜாவினால் அனுப்பப்பட்ட **भीमदूताः**—பயங்கரமான தூதர்கள் **यदा**—எப்பொழுது, **महापापिनं**—மஹாபாபியான **मां**—என்னை **समाक्रष्टुं** - இழுத்துக்கொண்டு போக **आरात्** - அருகில் **समायान्ति**- வருகிறார்களோ, **तस्मिन्हि काले**—அந்தக்காலத்தில் **दयाब्धे**—கருணைக்கடலே! **मदीये मनसि**—என்னுடைய மனதில் **अम्ब**—தாயே **त्वम् आविरेधि**—நீ ஆவிர்பவிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

'பிராண வியோக காலத்தில் எந்த தேவதையை நினைக்கிறானோ, அந்த தேவதாஸ்வரூபத்தையடைகிறான் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. கீதாசார்யரும்,

यं यं वापि स्मरन्भावं त्यजत्यन्ते कलेवरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ॥

(யம் யம் வாபி ஸ்மரன் பாவம் த்யஜத்யந்தே கலேபரம்
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித:)

என்று சொல்கிறார். உன் அருளால் அந்த்ய காலத்தில் உன் ஸ்மரணம் ஏற்பட்டால் நான் கடைத்தேறிவிடுவேன்,

(அ) மஹாபாபங்களைச்செய்துவரும் நமக்கு, இப்படிப் பட்ட பாக்யம் கிடைக்குமோ என்னும் ஸந்தேகத்தைப் போக்கி, அம்பிகை பக்தபராதீனை என்பது அடுத்த சுலோகத்தில் கூறப்படுகிறது:—

महापापिनं मां समुद्धर्तुमेव त्वया पुण्यपापे परोक्षे कृते हि ।
न चेत्सर्वलोको विजानीयुरेनं महापापिनं त्वां च वैषम्ययुक्ताम् ॥

மஹாபாபிநம் மாம் ஸமுத்தர்த்துமேவ
த்வயா புண்யபாபே பரோக்ஷே க்ருதே ஹி ।
ந சேத் ஸர்வலோகோ விஜாநீயுரேநம்
மஹாபாபிநம் த்வாம் ச வைஷம்யயுக்தாம் ॥

महापापिनं—மஹாபாபங்களைச் செய்திருக்கிற **मां**—என்னை **समुद्धर्तुमेव**-கைதூக்கிவிடுவதற்காகவே **पुण्यपापे**-ஜன்மாந்தரீய புண்யபாபங்கள் **त्वया**—உன்னால் **परोक्षे कृते हि**—நிச்சயமாக புலப்படாமல் செய்யப்பட்டிருக்கின்றன **न चेत्**—அப்படிச் செய்யாத விஷயத்தில் **सर्वलोकः**—எல்லா ஜனங்களும் **एनं**—இந்த என்னை **महापापिनं**—மஹாபாபி என்றும் **त्वां च**—உன்னையும் **वैषम्ययुक्ताम्**—பக்ஷபாதம் உள்ளவள் என்றும் **विजानीयुः**—தெரிந்துகொண்டுவிடுவார்கள்.

புண்யபாபங்களுக்கு அத்ருஷ்டம் என்று பெயர். நேரில் பார்க்கமுடியாது. அதனால்தான் அளவற்ற பாபங்களைச் செய்தபோதிலும் என்னை மஹாபாபி என்று உலகத்தார் சொல்வதில்லை. எனக்கு அருள் புரியும் உன்னிடமும் பக்ஷபாத தோஷத்தைக் கூறுவதில்லை. மஹா பாபியாயிருந்தாலும் பக்தனுக்கு நீ அருள்புரிகிறாய். (14)

(அ) பராசக்தியின் பஜனம் அவசியமென்பதைக் கூறிவிட்டு அதனால் பக்தனிடத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்களையும் நன்மைகளையும்பற்றி அடுத்த நான்கு சுலோகங்களில் சொல்லப்படுகிறது :—

शरीरे स्वकेऽहंत्वमस्तं प्रयायादिति त्वां प्रपन्नाः जनाः शारदाम्ब ।
समस्तेषु वस्तुष्वहंतां भजन्ते किमेतद्विचित्रं चिदानन्दरूपे ॥ १५ ॥

ஶரீரே ஸ்வகேஹம்த்வமஸ்தம் ப்ரயாயா-
த்திதி த்வாம் ப்ரபன்னா: ஜனா: ஶாரதாம்ப ।
ஸமஸ்தேஷு வஸ்துஷ்வஹந்தாம் பஜந்தே
கிமேதத் விசித்ரம் சிதாநந்தரூபே ॥

शारदाम्ब-ஹே சாரதாம்ப! **स्वके शरीरे**-தன்னுடைய சரீரத்தில் **अहंत्वं**-நான் என்னும் பாவனையானது, **अस्तं प्रयायात् इति**-விலகவேண்டும் என்று **त्वां**-உன்னை **प्रपन्नाः**-சரணமடைந்த **जनाः**-ஜனங்கள் **समस्तेषु वस्तुषु**-ஜகத்திலுள்ள எல்லாப் பதார்த்தங்களிலும் **अहंतां**-நான் என்னும் பாவனையை **भजन्ते**-அடைந்துவிடுகிறார்கள். **चिदानन्दरूपे**-சித்தும் ஆனந்தமும் ஸ்வரூபமாயுள்ளவளே, **किं एतत् विचित्रं**-இது என்ன விசித்ரமாக இருக்கிறது?

"சாரதே! அம்பிகே! இது என்ன ஆச்சரியமாக இருக்கிறதே! தன் சரீரத்தில் 'நான்' என்னும் பாவனை ஒழியவேண்டும் என்ற நோக்கத்துடன் உன்னை ஆச்ரயித்தால், ஜகத்திலுள்ள எல்லாப் பதார்த்தங்களிலும் 'நான்' என்னும் பாவனையல்லவா அவர்களுக்கு வந்துவிடுகிறது" இதன் கருத்தென்னவெனில் அம்பிகையை உபாஸிக்கிறவன் அவள் அனுக்ரஹத்தால்,

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः ॥

(ஸர்வபூதஸ்தமாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி ।
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶன: ॥)

என்று கீதையில் சொல்லிய பிரகாரம் ஜகத்ரூபிணியான பராசக்தியின் ஸாயுஜ்யத்தையடைகிறான். ஸர்வாத்மபாவம் ஏற்படுகிறது. (15)

महाव्याधिशान्त्यै तथा निःस्वतायाः प्रणाशाय ये त्वां भजन्ते नरास्ते ।
जवाच्छूलिनः स्युश्च कृत्तिं वसानाः क एष प्रकारः प्रपन्नेषु तेऽम्ब ॥

மஹாவ்யாதிஶாந்த்யை ததா நிஸ்வதாயா:
ப்ரணாஶாய யே த்வாம் பஜந்தே நராஸ்தே ।

ஜவாத் சூலின: ஸ்யுஶ்ச க்ருத்திம் வஸாநா:
க ஏஷ ப்ரகார: ப்ரபன்னேஷு தேம்ப ॥

महा-व्याधि-शान्त्यै-(ஸம்ஸாரமாகிய மஹா துக்கமான) பெரிய வியாதி ஸ்வஸ்தமாவதற்கும், **तथा**-அதே ப்ரகாரம் **निःस्वतायाः प्रणाशाय**-தாரித்ரியம் நீங்குவதற்காகவும் (மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கக்கூடிய ஸாதன சதுஷ்டய ஸம்பத் இல்லாத குறை நீங்குவதற்காகவும்), **ये नराः**-எந்த மனிதர்கள், **त्वां भजन्ते**-உன்னை உபாஸிக்கிறார்களோ **ते**-அவர்கள், **जवात्**-வெகு சீக்கிரமே, **शूलिनः** சூலிகளாகவும் (சூலத்தை உடைய பரமேச்வரரூபமாயும்), **कृत्तिं वसानाः**-யானைத்தோலை தரித்தவர்களாகவும் (யானைத் தோலை வஸ்திரமாக உடைய பரமேச்வரரூபமாயும்) **स्युः**-ஆகிவிடுகின்றனர். (**कृत्तिं वसानाः** - தாரித்ரியத்தினால் வேடர்கள் மாதிரி யானைத் தோலை வஸ்திரமாக உள்ளவர் என்று மற்றொரு அர்த்தமும் உண்டு.) **अम्ब**-தாயே, **ते प्रपन्नेषु** - உன்னைச் சரணமடைந்தவர்களிடம் இம்மாதிரி நடந்துகொள்வது **क एष प्रकारः** - இது என்ன முறை?

மஹா வியாதி போகவும், தாரித்ரியம் நீங்கவும் உன்னை உபாஸிக்கின்ற பக்தர்கள் சூலமுள்ளவர்களாகவும், யானைத் தோலை உடுத்துகிறவர்களாகவும் ஆகிறார்களே! இது முறையா என்பது வெளிப்படையான பொருள். உண்மையில் சூலம் தரித்தவரும், யானைத்தோல் உடுத்தியவரும் காமனை ஜயித்தவருமான பரமேசுவரஸ்வரூபமாக ஆகிறார்கள். பரமேசுவரனும் அம்பிகையும் ஒரே தத்வம். (16)

(தொடரும்)

हितोपदेशं शृणुयात् कुर्वीत च यथोदितम् ।
विदुरोक्तमकृत्वाऽभूत् कौरवः शोकशल्यभाक् ॥

நல்லோர்கள் சொல்லும் ஹிதோபதேசத்தைக் கேட்க வேண்டும். அதன்படி நடக்கவும் வேண்டும். விதுரர் சொன்ன நல்வார்த்தையைக்கேட்காததால் திருதராஷ்டிரர் பிள்ளைகளைப்பிரிந்து மிகுந்த சோகத்தையடைந்தார்.

ஸ்ரீ ஸ்வயம்வரா பார்வதீ ஸ்தோத்ரம்
(முன் தொடர்ச்சி)

गिर्यल्पमुग्धविशदं नवयौवनं श्रीधुर्यं विलासमयमक्ष्णि कृशं विलग्ने ।
पर्युच्छ्रितं कुचभरे जघने घनं यत् पर्युत्सुकोऽस्मि सततं जननि प्रसीद ॥

கிர்யல்ப முக்த விஶதம் நவ யௌவனம் ஸ்ரீ-
துர்யம் விலாஸமய மக்ஷ்ணி க்ருஶம் விலக்னே ।
பர்யுச்ச்ரிதம் குசபரே ஜகநே கனம் யத்
பர்யுத்ஸுகோऽஸ்மி ஸததம் ஜனனி ப்ரஸீத ॥

தாயே, உன் ஸ்வரூபம் ஒவ்வொரு அம்சத்திலும் விசேஷமான சோபையுடன் விளங்குகிறது. உன் வாக்கு மிதமாகவும் (கொஞ்சமாயும்) அழகாயும், தெளிவாகவுமிருக்கிறது. புதிய யௌவனம் மிகுந்த சோபையுடன் விளங்குகிறது. கண்களில் விலாஸம் (சிருங்கார பாவம்) மிளிர்கிறது. இடை குறுகியதாகவும், பருத்த ஸ்தன மண்டலம் உயர்ந்தும், இடைத்தட்டு நெருங்கிப்பருத்ததாயும் இருக்கிறது. தர்சனம் செய்ய ஆவலுள்ளவனாயிருக்கிறேன் அருள்புரியவேண்டும். அம்பிகையின் வாக்கின் மாதுர்யத்தை அநுபவித்தபிறகு குயிலின் நாதம் கூட கடோரமாயிருப்பதாக காளிதாஸனும், விபஞ்சீ என்ற வீணா நாதத்தையும் அது தோற்கடித்துவிடுகிறது என்று ஸ்ரீசங்கர பகவத்பாதரும் கூறுகிறார்கள். '**पर्युत्सुकोऽस्मि जननीक्षितुमात्मरूपम्**' என்று பாடபேதம்.

निर्धूतकुण्डलमुदञ्चितघर्मलेशं विस्रस्तकेशमभितश्चलदीक्षणान्तम् ।
निर्ध्वानिकङ्कणमुदग्रकुचान्तमन्तर्भ्रामि तातगृहकन्दुकखेलनं ते ॥ ५ ॥

நிர்தூத குண்டலமுதஞ்சித கர்மலேஶம்
விஸ்ரஸ்த கேஶம் அபிதஸ்சலதீக்ஷணாந்தம் ।
நிர்த்வானி கங்கணமுதக்ர குசாந்தமந்தர்
பத்ராமி தாத க்ருஹ கந்துக கேலனம் தே ॥ 5

அம்பிகை பந்துவிளையாடும் அவஸரத்தை வர்ணிக்கிறார் :– நீ உன் தந்தையான மலையரசனின் அரண்மனையில் தோழிகளுடன் ஓடியாடிப் பந்து விளையாடும்பொழுது காதிலுள்ள குண்டலங்கள் நன்கு அசைகின்றன. சரீரம் பூராவும் வியர்வைத் துளிகள் காண்கின்றன. தலை மயிர் அவிழ்ந்துவிடுகிறது. கடாக்ஷப்பார்வையை நான்கு பக்கங்களிலும் செலுத்துகிறாய். கைகளிலுள்ள வளைகள் ஒலிக்கின்றன. மார்பு மேல் எழும்புகிறது. இவ்வித அவஸரத்திலுள்ள உன் ஸ்வரூபத்தை தியானத்தால் என் மனத்தில் நிலைநிறுத்திக் கொள்கிறேன்.

योगेश्वरं प्रचुरभक्ति गिरीशमारादेकान्तवर्तिनमुपेत्य तपश्चरन्तम् ।
आकाङ्क्षया परिचरिष्णुमनाकुलां त्वां ये केचिदीश्वरि भजन्ति त एव धन्याः ॥

யோகேஶ்வரம் ப்ரசுர பக்தி கிரீஶமாராத்
ஏகாந்தவர்தினமுபேத்ய தபஸ்சரந்தம் ।
ஆகாங்க்ஷயா பரிசரிஷ்ணுமநாகுலாம் த்வாம்
யே கேசிதீஶ்வரி பஜந்தி த ஏவ தந்யா: ॥

ஹே ஈசுவரி! யோகங்களுக்கெல்லாம் அதிபதியாயும் தனிமையில் இருந்துகொண்டு தவம்செய்பவராயுமிருக்கிற பரமேச்வரனை அருகில் அணுகி தன் விருப்பத்தினாலேயே அவருக்கு வேண்டிய சுச்ருஷைகளைச் செய்பவளாயும், சிறிதும் மனக்கலக்கமற்றவளாயுமுள்ள உன்னை யார் பஜிக்கிறார்களோ, அவர்களே பாக்யசாலிகளாக ஆவார்கள்.

உலகிற்கு எல்லாவித யோகங்களையும் அருளுபவர் யோகேசுவரரான பரமேசுவரன். நீயோ ஜகத்திற்கு ஈசுவரி. அவர் தவம் செய்வதும், நீ பணிவிடை செய்வதும் உலக க்ஷேமத்திற்கே தவிர இதனால் அடையவேண்டுவது உங்களுக்கு ஒன்றுமில்லை.

*'**स्वयं विधाता तपसः फलानां केनापि कामेन तपश्चचार**'

(தொடரும்)

* * *

यथा धेनुसहस्रेषु वत्सो विन्दति मातरम् ।
तथा पूर्वकृतं कर्म कर्तारमनुगच्छति ॥

ஆயிரம் பசுக்கள் கூடியிருக்கும் மந்தையில் கன்று தன் தாயைச் சேர்வதுபோல முன்வினை, செய்தவனைப் பின் தொடர்ந்து செல்கிறது.

---

*குமாரஸம்பவம் 1–57.

S. K. ii-4-2

ஸ்ரீ ஸத்குருபாதுகாஸ்தவராஜம்

(ஸ்ரீ ஸச்சிதானந்ததீர்த்த ஸ்வாமிகள்)

(முன் தொடர்ச்சி)

संसाराम्बुधिपारलङ्घनकलाजङ्घालतामीयुषः
सर्वाम्नायरहस्यबोधनविधौ वैदग्ध्यमासेदुषः ।
वैराग्यैकनिकेतनस्य विबुधव्रातैकरक्षामणेः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ५ ॥

ஸம்ஸாராம்புதி பாரலங்கந கலா ஜங்காலதாமீயுஷ:
ஸர்வாம்நாய ரஹஸ்ய போதந விதௌ வைதக்த்ய
மாஸேதுஷ: ।
வைராக்யைக நிகேதநஸ்ய விபுதவ்ராதைக ரக்ஷாமணே:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

संसाराम्बुधि-ஸம்ஸாரமென்னும் கடலின் **पार**-அக்கரையை **लङ्घनकला**-தாண்டிச்செல்லும் கலையில் **जङ्घालतां**-மிகுந்த வேகத்துடன் செல்லும் திறமையை **ईयुषः**-அடைந்தவரும், **सर्वाम्नाय**-எல்லா வேதங்களின் **रहस्य**-ரஹஸ்யத்தை **बोधनविधौ**-உபதேசிக்கும் கார்யத்தில் **वैदग्ध्यं**-திறமையை **आसेदुषः**-அடைந்தவரும் **वैराग्यैकनिकेतनस्य**-பற்றின்மைக்கு ஒரே (ஒப்பற்ற) இருப்பிடமானவரும் **विबुधव्रातैकरक्षामणेः**-வித்வான்களின் ஸமூஹத்தை ஒப்பற்ற முறையில் காப்பாற்றுபவருமான **श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः**-ஸ்ரீ சந்திரசேகர பாரதீ குருவின் **श्रीपादुका**-ஸ்ரீபாதுகை **मे**-எனக்கு **गतिः**-அடைக்கலம்.

आस्थानीमधिजग्मुषोऽपि विषयेष्वास्थामनापेदुषः
कारुण्यार्द्रकटाक्षसन्ततिजुषः कल्याणसीमापुषः ।
तुङ्गातीरमुपेयुषो मम मनस्यावासमासेदुषः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ६ ॥

ஆஸ்தாநீமதிஜக்முஷோऽபி விஷயேஷ்வாஸ்தாமநாபேதுஷ:
காருண்யார்த்ர கடாக்ஷஸந்ததி ஜுஷ: கல்யாண
ஸீமாபுஷ: ।
துங்காதீரமுபேயுஷோ மம மநஸ்யாவாஸமாஸேதுஷ:
ஸ்ரீமச்சந்த்ரகிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

आस्थानीं-சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸம்ஸ்தானத்தை **अधिजग्मुषोऽपि**-அதிபதியாக அடைந்திருந்தபோதிலும் **विषयेषु**-விஷயங்களில் **आस्थां**-ஆசையை **अनापेदुषः**-அடையாதவரும் **कारुण्यार्द्र**-கருணாரஸத்தால் நனைந்த **कटाक्षसन्ततिजुषः**-கடாக்ஷ பரம்பரையுள்ளவரும், **कल्याणसीमापुषः**-உயர்ந்த எல்லைவரை மங்களங்களை ஓங்கச்செய்கின்றவரும், **तुङ्गातीरं**-துங்கா நதியின் கரையை **उपेयुषः**-அடைந்தவரும் **मम**-என்னுடைய **मनसि**-மனதில் **आवासं**-வாஸத்தை **आसेदुषः**-அடைந்தவருமான **श्रीमच्चन्द्र + गतिः**-ஸ்ரீ சந்திரசேகர பாரதீ குருவின் பாதுகை எனக்கு கதி.

சிருங்கேரி ஜகத்குரு ஸம்ஸ்தானாதிபதியாயிருப்பது என்பது சக்ரவர்த்தி பதவிபோன்றது. ஆசார்யஸ்தானத்திலிருப்பதால் எல்லாம் அவர்களுக்கு ஸ்வாதீனமானது. அப்படியிருந்தபோதிலும் ஒன்றிலும் பற்றில்லாமல் ஸ்ரீ மஹா ஸந்நிதானம் விளங்கி வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயம். எல்லா விஷயங்களும் தனக்கு ஸ்வாதீனமாய் இருந்தும் அதில் ஆசையைத் துறப்பதுதான் உண்மையான வைராக்யம்.

'विकारहेतौ सति विक्रियन्ते येषां न चेतांसि त एव धीराः'
(குமாரஸம்பவம் 1–59)

जीवन्मुक्तिसुखानुभूतिलहरीमामज्ज्यमानान्तरो-
ऽप्यात्मानं जडबालमूकबधिरोन्मत्तादिवद्दर्शयन् ।
योऽयं व्यञ्जयति क्रमेण भरतादीनां स्थितिं तादृशः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ७ ॥

ஜீவந்முக்தி ஸுகாநுபூதி லஹரீ மாமஜ்ஜ்யமாநாந்தரோ-
ऽப்யாத்மாநம் ஜட பால மூக பதிரோந்மத்தாதிவத்
தர்ஶயந் ।
யோயம் வ்யஞ்ஜயதி க்ரமேண பரதாதீநாம் ஸ்திதிம்
தாத்ருஶ:
ஸ்ரீமச்சந்த்ரகிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

जीवन्मुक्तिसुखानुभूतिलहरी - ஜீவத்தசையிலேயே முக்தியடைந்து அதனுலேற்பட்ட பிரஹ்மானந்தானுபவ பிரவாஹத்தில் **मानसजमानान्तर: अपि**-மனம் நன்கு மூழ்கியிருந்த போதிலும் **जड**-அறிவில்லாதவன், **बाल**-சிறுவன் **मूक**-ஊமை **बधिर**-செவிடன் **उन्मत्तादिवत्**-பைத்யம் பிடித்தவன் இவர் முதலானவர்கள்போல **आत्मानं**-தன்னை **दर्शयन्**-(வெளியில்) காண்பித்துக்கொண்டு **क्रमेण**-முறையே **भरतादीनां**-ஜடபரதர் முதலானவர்களின் **स्थिति**-நிலைமையை **यो ऽयं**-எந்த இவர் **व्यञ्जयति**-வெளிக்காட்டுகிறுரோ **तादृश:**-அந்த **श्रीमच्चन्द्र + गति:**-ஸ்ரீ சந்திரசேகர பாரதீ குருவின் பாதுகை எனக்கு கதி.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரமடைந்து அக்ஞானம் விலகி முக்தியேற்பட்டு ஜீவன்முக்தராக விளங்கினவர். இவர் மனம் எப்பொழுதும் ப்ரஹ்மானந்த அநுபவத்திலேயே நிலைத்திருக்கும். எல்லாமறிந்தவரா யிருந்தும் ஜடபரதர்போல் உலக வியவஹாரத்தில் வேணு மென்றே ஒன்றுமறியாதவர்போல நடந்துகொள்வார்கள். உண்மை நிலையையறியாத சிலர் இவரைப் பார்த்து அறிவில்லாதவர் என்றும், அறிவு வளர்ச்சியடையவில்லை என்றும் நினைக்கின்றனர். நாம் பேசி அவர் பதில் பேசாமல் இருந்தால் ஊமை என்றும், செவிடு என்றும் எண்ணுகின்றனர். சில ஸமயம் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் பேசுவதைப் பார்த்து சித்தப்ரமம் என்றும் சொல்கின்றனர். ஞானிகள் உலக வியவஹாரத்தில் இம்மாதிரித்தான் இருப்பார்கள். ஜடபரதர், ஸதாசிவப்ரஹ்மம் இவர்களின் நிலையை புராணம், சரித்திரம் மூலமாய் கேள்விப்பட்டிருக்கிறேம். அதை ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தினிடம் நேரில் பார்த்தோம்.

(7)

सङ्गी बाध्यत एव लोक इति वा वैयासिकं यद्वच:
तस्याप्यद्भुतगौरवं विशदयन्सङ्गं त्यजँल्लौकिकम् ।
स्वात्मानन्दरसानुभूतिभरितो बाभाति यस्तादृश:
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरो: श्रीपादुका मे गति: ॥ ८ ॥

ஸங்கீ பாத்யத ஏவ லோக இதி வா வையாஸிகம் யத்வச:
தஸ்யாப்யத்புத கௌரவம் விஶதயந் ஸங்கம் த்யஜந் லௌகிகம் ।
ஸ்வாத்மாநந்த ரஸாநுபூதி பரிதோ பாபாதி யஸ்தாத்ருஶ:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

सङ्गी-பற்றுதல் உள்ளவன் **लोके**-உலகில் **बाध्यत एवेति**-அவசியம் துன்புறுவான் என்ற **वैयासिकं**-வியாஸருடையதான **यत् वच:**-எந்த வார்த்தையுண்டோ **तस्यापि** அதற்கும் **अद्भुतगौरवं**-வியக்கத்தக்க மதிப்பை **विशदयन्**-வெளிப்படுத்திக்கொண்டு **लौकिकं सङ्गं**-உலகப்பற்றுதலை **त्यजन्**-விட்டு **स्वात्मानन्दरसानुभूतिभरित:**-ஆத்மானந்தத்தின் ரஸத்தை பூர்ணமாயனுபவித்துக்கொண்டு **य:**-எவர் **बाभाति**-விளங்குகிருரோ, **तादृश**-அப்பேற்பட்ட **श्रीमच्चन्द्र + गति:**-ஸ்ரீ சந்திரசேகர பாரதீ குருவின் பாதுகை கதி.

ஸ்ரீ மஹா ஸந்நிதானம் ஜீவன் முக்தி நிலையை அடைந்து விட்டதால் இனிமேல் எந்த ஸங்கம் ஏற்பட்டாலும் அவர் நிலை மாருது. அவர் உலக ஸங்கத்தை விட்டது அவருக்காகவன்று. தன் நிலையையடையாத மற்றவர்கள் ஸங்கத்தால் கெட்டுப்போகக்கூடாது என்ற கருணையால் அவர்களுக்கு வழிகாட்டியாக தான் ஸங்கத்தை துறந்தார். இதன் மூலம் 'ஸங்கத்தால் துன்பமடைவான்' என்ற வியாஸ வாக்குக்கும் மதிப்புக்கொடுத்ததாக ஆகிறது.

आलापैरनवद्यसूक्तिभरितैरानन्दसंदायिभि:
ब्रह्मात्मानुभवप्रकाशनपरै: स्वैरोद्गतै: सुस्वरै: ।
बालोन्मत्तविडम्बनव्यतिकरे व्यावृण्वतो नैपुणीं
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरो: श्रीपादुका मे गति: ॥ ९ ॥

ஆலாபைரநவத்ய ஸூக்தி பரிதைராநந்த ஸந்தாயிபி:
ப்ரஹ்மாத்மாநுபவ ப்ரகாஶந பரை: ஸ்வைரோத்கதை: ஸுஸ்வரை: ॥
பாலோந்மத்த விடம்பந வ்யதிகரே வ்யாவ்ருண்வதோ நைபுணீம்
ஸ்ரீமச்சந்த்ரகிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

अनवद्य-குற்றமற்ற **सूक्तिभरितैः**-நல்வார்த்தை நிரம்பியதும் **आनन्दसंदायिभिः**-ஆனந்தத்தைத் தருவதும் **ब्रह्मात्मानुभव-प्रकाशनपरैः**-தன் ப்ரஹ்மானுபவத்தை வெளிக்காட்டுவதும் **स्वैरोद्गतैः**-தன் இஷ்டப்படி வெளிவந்ததும் **सुस्वरैः**-நல்ல இனிமையான த்வனியுள்ளதுமான **आलापैः**-பேச்சுக்களால் **बालोन्मत्तविडम्बनव्यतिकरे**-சிறுவன், பித்தன் இவர்களைப்போல் நடிப்பதில் **नैपुणीं**-திறமையை **व्याकुर्वतः**-காட்டுகிற **श्रीमच्चन्द्र + गतिः**-ஸ்ரீ சந்திரசேகர பாரதீ குருவின் ஸ்ரீபாதுகை எனக்கு சரணம்.

ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் பேச்சுக்கள் பாமரர்களுக்கு சிறுவர்களுடையவும், பித்தர்களுடையவும் பேச்சுக்கள் போலவே தோன்றும். சிறுவர் போலும் பித்தர்போலும் நடிப்பதில் ஸ்ரீஸ்வாமிகள் திறமையைக் காட்டுவார்கள். ஆனால் விவேகிகள் அவ்வாறு எண்ணமாட்டார்கள். யத்ருச்சையாக அவர்கள் முகார விந்தத்திலிருந்து வெளி வரும் ஒவ்வொரு வார்த்தையும் ஆத்மானுபவத்தை நன்கு காட்டும். கேட்போர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். அச்சொல்லில் ஒரு தோஷத்தையும் யாரும் கூறமுடியாது.

चमत्कृतसुधीचेताश्चन्द्रचूडालसद्गुरुः ।
सच्चिदानन्दतीर्थेऽस्मिन्समुदञ्चयतां दृशौ ॥ १० ॥

சமத்க்ருத ஸுதீ சேதாஶ்சந்த்ர சூடால ஸத்குரு: ।
ஸச்சிதானந்ததீர்த்தேஸ்மிந் ஸமுதஞ்சயதாம் த்ருஶௌ ॥

மிகுந்த அறிவுள்ளவர்களுடைய மனதையும் வியப்பில் ஆழ்த்துகின்ற ஸ்ரீசந்திரசேகர பாரதீ ஸத்குரு இந்த ஸச்சிதானந்த தீர்த்தரிடம் தன் கிருபாகடாக்ஷத்தை அருளட்டும். (10)

गतेऽपि वयसि ग्राह्या विद्या सर्वात्मना बुधैः ।
यद्यपि स्यान्न फलदा सुलभा साऽन्यजन्मनि ॥

வயது அதிகமானாலும் எல்லாவிதமாகவும் கல்வி கற்க வேண்டும். அது இப்பிறவியில் பலனைக் கொடுக்கா விட்டாலும் அடுத்த பிறவியில் உபயோகப்படும்.

சிருங்கேரி ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் உபதேசம்

பரமேசுவரனுக்கு 'பசுபதி' என்ற பெயர் பிரஸித்த மானது. 'பசுவிற்கு யஜமானன், அதைக் காப்பாற்று கிறவன்' என்பது இதன் பொருள். எந்தப் பசுவிற்குப் பரமேசுவரன் யஜமானன்? எந்தப் பசுவைக் காப்பாற்று கிறார்? ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சொல்கிறார்:— 'நாம் செய்யும் பக்திதான் பசு. இதற்கு யஜமானன் பரமேசுவரன். அதனால் அவருக்கு பசுபதி என்ற பெயர் வந்தது' என்று. ஸாதாரணமாகப் பசுக்கள் தொழுவில் வாஸம் செய்யும். அந்த இடம் குப்பை கூளங்கள் நிறைந்திருக்கும். ஆனால் இந்த பக்தி என்ற பசு அம்மாதிரி அழுக்குள்ள இடத்தில் வாஸம் செய்வதில்லை. மிகத் தூய்மையான பரமேசனுடைய திருப்பாதங்களில் வாஸம் செய்கிறது '**विमलभवत्पद-गोष्ठमावसन्तीम्**' (பரிசுத்தமான தங்கள் பாதங்களாகிற கொட்டிலில் வஸிக்கின்ற). இதனால் இந்த பக்தி என்னும் பசு வாஸம் செய்யும் இருப்பிடமே மிகப் பெருமை வாய்ந்தது எனக் காண்பித்தார்.

பசு நமக்குப் பாலைக்கொடுக்கிறது. இந்த பக்தி நமக்கு எதைக் கொடுக்கிறது என்று கேட்கலாம். பக்தியினால் எல்லாப் பயன்களையும் பெறலாம். இருந்தாலும் உடனே கிடைக்கக்கூடிய முக்யமான பயன் 'ஸந்தோஷம்' என்னும் அமிருதம். எவ்வளவு உயர்ந்த பசுவாயிருந்தாலும் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட அளவுதான் பாலைக் கொடுக்கும். இந்த பக்தி என்ற பசுவோ எப்பொழுதும், அளவிடமுடியாத அளவில் ஸந்தோஷமென்ற பாலைக் கொடுக்கிறது '**अमितमुदमृतं मुहुर्दुहन्तीम्**'। அதாவது எவன் மனதில் பக்தி வேரூன்றியிருக்கிறதோ, அவன் முகம் ஒருக்காலும் வாட்டமடையாது; எப்பொழுதும் ஸந்தோஷ மாகவே இருப்பான்.

பசு கட்டுத்துறையில் ஓர் முளையில் கட்டப்பட்டிருக் கும். பக்தி என்ற பசுவோ புண்யபரிபாகம் என்ற முளையில் கட்டப்பட்டிருக்கிறது. அதாவது பல பிறவிகளில் ஆசையைத் துறந்து நிறையப் புண்யம் செய்தவர்களுக்குத்

தான் அதன் பயனாக பக்தி ஏற்படும் '**सुपुण्यपाकां**'. பகவத் பாதாரவிந்தங்களில் பக்தி ஏற்படுவதற்கே பூர்வ புண்யம் செய்திருக்கவேண்டும். உலகில் மாடுகளை இடையன் காப்பாற்றுகிறான். இந்த பக்தி என்னும் பசுவை யார் காப்பாற்றுவது? அதற்காகத்தான் பக்தன் பகவானை பிரார்த்திக்கிறான் :— "பசுபதியே, நீர் தயவுவைத்து இந்த பக்தி என்ற பசுவைக் காப்பாற்றவேண்டும். இது சாந்த மான பசு. மேலும் நீர் பசுபதி என்ற பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர். பசுவைக் காப்பாற்றினால்தான் இப் பெயர் பொருந்தும்" அதாவது உமது பாதாரவிந்தத்தில் எப்பொழுதும் எனக்கு பக்தி நிலைத்திருக்கவேண்டும். பக்தி நிலைத்திருப்பதற்கு பகவானின் அருள்வேண்டும். இவ்வாறு சிவானந்தலஹரியில் (சு. 68) பகவத்பாதர் கூறுகிறார் :—

विमलभवत्पदगोष्ठमावसन्तीममितमुदमृतं मुहुर्दुहन्तीम् ।
सदय पशुपते सुपुण्यपाकां मम परिपालय भक्तिधेनुमेकाम् ॥

ஸ்ரீ சங்கரபகவத்பாதர் நிர்குண ப்ரஹ்மவாதியாயிருந்தாலும் ஸகுணமான ஈசுவரனின் உபாஸனையை இவ்வாறு வற்புறுத்திக் கூறுகிறார். இது சரியா என்று கேட்கலாம். முக்தி என்ற பரமானந்தத்தை ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தால் அக்ஞானம் விலகினால்தான் அடையமுடியும். ஜீவன் எப்பொழுதும் ஆனந்த ஸ்வரூபமாயிருந்தாலும் அக்ஞானத் தால் இப்பொழுது நமக்குத் தெரிவதில்லை. பாசி படர்ந்த குளத்தில் கல்லை எறிந்தபொழுது அந்த இடத்தில் மட்டும் ஜலம் தென்படுவதுபோல் கோரின விஷயம் கைக்குக் கிடைத்து ஆசையடங்கியதும் சிறிது நேரம் அந்த ஆனந்தம் தெரியும். பிறகு பாசி மூடுவதுபோல் ஆனந்தம் மறைந்துவிடும். ஸுஷுப்தியில் விஷய ஸம்பந்த மில்லாமலே ஆனந்தம் விளங்கினாலும் அக்ஞானமும் கூட இருக்கிறது. இந்த ஆனந்தம் ஞானிக்கு அக்ஞான மில்லாமல் நன்கு விளங்குகிறது. ப்ரஹ்மஞானமேற்பட வேதாந்த விசாரம் செய்யவேண்டும். நிஷ்காம கர்மானுஷ்டானத்தால் சித்த சுத்தியும் ஈசுவரபக்தியு முள்ளவர்களுக்குத்தான் ஆத்மஞானமேற்படும். இதனால் தான் ஆசார்யாள் ஈசுவர பக்தியை வற்புறுத்துகிறார்கள்.

ஸ்ரீ ஸத்குருவின் மஹிமை

ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள்

நமது குருசரணாள் (ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகர பாரதீ மஹாஸந்நிதானம்) தமது குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு, பராபரகுரு இவர்களுக்குப் பிரதி வருஷமும் ஆராதனை நடத்தி வந்தது எல்லோரும் அறிந்த விஷயமே. அதில் முக்கியமாகக் குரு ஆராதனையின் பொழுது கந்த ஆராதனை, புஷ்ப ஆராதனை, தீர்த்த ஆராதனை என்ற மூன்று ஆராதனைகளையும் மூன்று நாட்கள் செய்வது வழக்கம். ஆராதனைக் காக வரிக்கப்படுகிற பிராம்மணர்கள் மற்ற உபசாரங் களுடன் போஜனத்திற்காக அந்த அந்த ஸ்தானத்தில் உட்கார்ந்தவுடன் இலைகளில் எல்லாப்பக்ஷ்ய போஜ்யாதி பதார்த்தங்களைப் பரிமாறச்செய்து நமது குரு நாதாள் தம் திவ்ய ஹஸ்தத்தாலேயே பிராம்மணர்களுக்குத் தீர்த்தம் கொடுப்பார்கள். பிராம்மணர்கள் சாப்பிட ஆரம்பித்த வுடன் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு விதமாக அர்த்த புஷ்டியுள்ள உபசாரவார்த்தை சொல்லிப் போவார்கள். ஒரு வருஷத்தில் "**सावकाशतया भोक्तव्यम**" (நீங்கள் இப் பொழுது நாழியாகிவிட்டது என்றோ இனிமேல் அதிக நாழி யாகுமென்றோ கவலைப்படவேண்டாம். வயிறு நிறையச் சாப்பிடுங்கள்) என்று முதலில் கூறிப்பின் தானே அதற்கு விளக்கமும் கூறினார்கள் :— "**अवकाशश्च कालतः न तु देशतः**" (அவகாசம் என்றால் இரண்டு விதம். காலத்தினால் ஏற் படும் அவகாசம், தேசத்தினால் உண்டாகும் அவகாசம். அதில் தேச அவகாசத்தை நான் குறிப்பிடவில்லை. கால அவகாசத்தைத்தான் குறிப்பிட்டேன்) என்று. அதாவது தேச அவகாசத்தை வைத்துக்கொண்டு ஸாவகாசமாய்ச் சாப்பிடுங்கள் என்றால் கொஞ்சம் வயிற்றில் இடம் விட்டுச் சாப்பிடுங்கள் என்று அர்த்தமாகி விடுமாம். அதற்காகவே தேச அவகாசத்தைத் தாம் குறிப்பிடவில்லையென்று விளக்கி விட்டார்கள். கால அவகாசத்தை வைத்துக்கொண்டால் தோஷமில்லை. கால அவகாசம் அதிகமானாலும் பாதக

மில்லை என்று தான் அதற்கு அர்த்தம் கிடைக்கும். ஆகவே **सावकाशत्वं च कालतः न तु देशतः** என்ற மணிமொழியால் அவகாசத்தை வயிற்றில் வைக்காமல் (வயிறு நிரம்ப) சாப்பிடுங்கள். நேரமாய்விடுமோ என்ற கவலை வேண்டாம் என்ற தம் அபிப்பிராயத்தை எத்தனை அழகாக இரண்டு பதங்களால் சுருக்கிக் கூறிவிட்டார்கள். இப்படியே ஒவ்வொரு வருஷ ஆராதனையிலும் ஏதாவது அபூர்வமான உபசார வார்த்தைகளைச்சொல்லிப் பிராம்மணர்களையும் மற்றப் பக்தர்களையும் பரவசப்படுத்துவார்கள். களிப்பூட்டு வார்கள்.

ஒருசமயம் ஆராதனைப் பிராம்மணர்கள் சாப்பிடும் பொழுது ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்ததைக் கண்ட குருநாதாள் அதை எப்படியாவது நிறுத்தும்படி செய்யவேண்டும் என்று எண்ணி ஒருஉபாயம் செய்தார்கள். இதை எழுதியவர் அப்பொழுது பிரம்மசாரியாயிருந்ததால் ஆராதனை கோஷ்டியில் கலந்து கொள்ளமுடியாதல்லவா? ஆகையால் இவரை வரவழைத்து அந்தப் பங்க்தியின் மத்தியில் உட்கார்ந்து கடோபநிஷத்தை உயர்ந்த த்வனி யில் பாராயணம் செய்யும்படி உத்தரவிட்டு 'பிராம்மணர்கள் கடோபநிஷத்தை அர்த்தாநுஸந்தானம் செய்துகொண்டே சாப்பிட்டால் நல்லது' என்று ஸூசனையாகச்சொல்லிவிட்டு சென்றார்கள். இவ்விதம் செய்ததால் அநேக பலன்கள் ஏற்பட்டன. பிராம்மணர்கள் பேசுவதை நிறுத்தியது, அதன்மூலம் ஆராதன கர்மாவானது ஸாபல்யமடைந்தது, பிராம்மணர்களின் மனத்திற்கு நிம்மதியுண்டானது, அவர் களுக்கு மனத்தாங்கல் ஏற்படாமலே இந்தக் கார்யத்தைச் சுலபமாக ஸாதித்தது. அதுமுதல் கடோபநிஷத் பாராயண ஸம்பிரதாயத்தை ஏற்படுத்தியது இன்னொரு பலன். இவ்விதம் அநேக பலன்கள் தரும்படியான ஒரு காரியத்தை ஒரு வார்த்தையினாலேயே ஸாதித்துவிட்டார்கள். அந்த மஹிமையை என்னவென்று சொல்வது!

இன்னொரு விஷயம்: பூர்வாச்ரமத்திலிருந்த இந்த எழுத்தாளரைப்பற்றியது. ஸ்ரீமடத்திலிருந்து ஆஸ்திக மதோஜ்ஜீவினீ என்ற பத்திரிகை சென்ற அக்ஷய

வருஷத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்ததல்லவா? அந்தப் பத்திரிகைக்கு அடிக்கடி விஷயதானம் செய்யும்படியும், மற்றவர்களின் கட்டுரைகளை ஸரிபார்க்கும்படியும், இந்த எழுத்தாளருக்கு உத்தரவிட்டிருந்தார்கள். அத்துடன் மல்லிக்கரை சுப்பிரமண்ய சாஸ்திரிகளுடன் கலந்து ஆலோசித்து சீர்திருத்தம் செய்து அச்சுக்கு அனுப்ப வேண்டுமென்றும் சொல்லியிருந்தார்கள். கொஞ்சகாலம் வரையில் உத்தரவுப்படியே நடந்துவந்தது. பல அபிப்பிராயபேதங்களாலும், வேறு சில காரணங்களாலும் மல்லிக்கரை சாஸ்திரிகளுக்கும் இந்த எழுத்தாளருக்கும் ஒத்துவரவில்லை. இதை எப்படியோ கண்டுபிடித்து இந்த எழுத்தாளரை வரவழைத்துப் பத்திரிகை விஷயங்களைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டு அதற்கெல்லாம் பதிலளித்த வுடன் "ஸரி போய் வா" என்று உத்தரவளித்தார்கள். இந்த எழுத்தாளர் கிளம்பும்பொழுது **उभयोरपि सामानाधि-करण्यं नास्ति वा?** என்று கேட்டார்கள். இதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். ஒரே அதிகரணத்தில் (இடத்தில்) இருப்பது இல்லையா என்று ஓர் அர்த்தம். அபிப்பிராயபேதமா என்று வேறொரு அர்த்தம். இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டாவது அர்த்தத்தைத் தான் குறிப்பிட்டு நம்மை எச்சரிக்கிறார் என்று நினைத்து இந்த எழுத்தாளர் தயங்கி நின்றபோது தம் வாக்கியத்துக்கு விளக்கம் கூறுவதுபோல் "**एकत्रैव निवासो नास्ति वा इति पृष्टम्** ஒரே இடத்தில் இருவரும் வசிப்பதில்லையோ? என்று கேட்டேன். அவ்வளவுதான்" என்று சிரித்துக்கொண்டு சொன்னார்கள். மல்லிக்கரை சாஸ்திரிகளிடமும் இப்படியே சொன்னார்களாம். நாங்கள் இருவரும் சேர்ந்து யோசித்துப் பார்த்து குருநாதாளின் அபிப்பிராயத்தைத்தெரிந்து கொண்டோம். "இருவரும் ஒற்றுமையாக ஒரே இடத்திலேயே இருந்துகொண்டு பத்திரிகை விஷயங்களைக் கவனிக்கவேண்டும்; அபிப்பிராய பேதமோ விரோதமோ இல்லாமல் ஸமரஸமாயிருந்து பத்திரிகையை நடத்த வேண்டும்" என்ற தம் கருத்தைச் சொல்லாமல் சொல்லி வியங்கியமாகத் தெரிவித்தார்கள் என்று அறிந்துகொண்டு

ஏற்கனவேயுள்ள அபிப்பிராய பேதத்தை விட்டுப் பரஸ்பரம் ஒற்றுமையாகவே இருந்து வந்தோம். இவ்விதம் ஒருவர் மனத்திற்கும் புண் படாமலும், தன் அதிகாரத்தை உபயோகிக்காமலும் விரோதமாக உள்ளவர்களை ஒற்றுமையுடன் ஒன்றுசேர்க்கும் அநுக்ரஹ சக்தியானது நமது குருசரணருக்கு அஸாதாரணமானது என்பதைப் பல உதாஹரணங்களால் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

கடைசியாக அவரது திவ்ய முகாரவிந்தத்திலிருந்து பெருகிய அமிருதமொழிகளில் ஒன்றை எடுத்து விளக்கி அநுஸந்தானம் செய்வோம்.

"सर्वज्ञतासकलशक्तियुतत्वहेतोः
श्रीशंभुसाम्यमखिला भवतो वदन्ति ।
आधिक्यमेव तव देशिक सङ्गिरेऽहं
राजाङ्घ्रिरस्ति हि भवान् स तु राजमौलिः ॥"

இந்தச் சுலோகமானது நமது குருசரணர் இயற்றிய 'ஆசார்யேந்திரஸ்தவம்' என்ற குருஸ்துதியிலுள்ளது. இதனால் தம் குருநாதாளான ஸ்ரீ நரஸிம்மபாரதீ ஸந்நிதானத்தின் பெருமையை எடுத்து விளக்குகிறார். பரமேச்வரனுக்கு ஸர்வக்ஞத்வம், ஸர்வசக்தத்வம் என்ற குணங்களால்தான் பெருமை ஏற்பட்டிருக்கிறது. அவ்விரண்டும் குருநாதாளான உங்களிடம் நன்ருகப் பொருந்தியிருக்கின்றன. தாங்கள் அறியாத வேதமோ சாஸ்திரமோ மற்ற விஷயங்களோ இவ்வுலகில் இல்லாதபடியாலும் எல்லாவற்றையும் அறிந்திருப்பதாலும் பரமேச்வரனைப் போலவே தாங்களும் ஒரு ஸர்வக்ஞமூர்த்திதான். அவ்விதமே ஸர்வசக்திகளும் தங்களிடம் பொருந்தியிருக்கின்றன. தாங்கள் காலடியில் செய்த ஆசார்ய ப்ரதிஷ்டை, கும்பாபிஷேகம், சாரதாம்பாளின் ஆலய நிர்மாணம் முதலியவைகளாலும், இறந்துபோன பல்லியைத் தீர்த்த ப்ரோக்ஷணத்தால் பிழைப்பித்த அதிசய கார்யத்தினுலும், மற்ற அமானுஷ லீலைகளாலும், ஸர்வசக்தர் என்பதை நிரூபித்திருக்கிறீர்கள். அதனால்தான் உங்களைப் பரமேசுவர அவதாரமென்ருே பரமேசுவரனுக்கு ஒப்பானவர் என்ருே ஜனங்கள் சொல்லுகிருர்கள். ஆனல் நான் அதனுல்மட்டும் திருப்தியடையவில்லை. தாங்கள் ஈச்வரனைவிட ஒருபடி மேலானவர்கள் என்று நிரூபித்துக் காட்டவேண்டும் என்றே எண்ணிக்கொண்டிருந்தேன். அது இன்று பலித்துவிட்டது. பரமேச்வரன் ராஜாவைத் (சந்திரனை) தலையில் வைத்திருக்கிருர். தாங்களோ ராஜாக்களைக் காலில் வைத்திருக்கிறீர்கள். இன்று அநேக ராஜாக்கள் தங்களது பாத கமலங்களில் வணங்குவதை நான் பார்த்துவிட்டேன். ஆகையால் ஒரு ராஜாவான சந்திரனைத் தம் சிரஸில் வைத்திருக்கும் பரமசிவன் பெரியவரா? அல்லது பல ராஜாக்களான அரசர்களைத் தங்களது பாதங்களில் வணங்க வைத்திருக்கும் தாங்கள் பெரியவரா? ஒரு ராஜாவை (சந்திரனை)த் தலையில் வைத்திருப்பவரைவிடப் பல ராஜாக்களைக் (அரசர்களை) காலில் வைத்திருப்பவர்தாம் பெரியவர் என்பதில் என்ன ஸந்தேஹம்? ஆகையால் தாங்கள்தாம் உலகிலேயே உயர்ந்த பொருள். அதற்காகத்தான் குரு என்று தங்களுக்குப் பெயர். அதிலும் ஜகத்குருவாயிருக்கிறீர்கள். உலகத்திலேயே உயர்ந்த பொருள் என்று அதன் அர்த்தம். இவ்விதம் நம் குருநாதாள் தம் குரு நாதாளைப்பற்றி வர்ணிக்கிருர். அந்த மஹா குருபக்தரான மஹா புருஷரை நாம் ஸ்மரித்து அவரது கருணை கடாக்ஷத்தைப்பெற்றுக் கிருதார்த்தர்களாவோம்.

வேதப்ராமாண்யம்

பேராசிரியர் M. K வெங்கடராம அய்யர்

(முன் தொடர்ச்சி)

இதையெல்லாம் பார்த்தால் ப்ராட்லியின் கொள்கையில் புருஷ புத்திக்கும் தர்க்கத்திற்கும் மேம்பட்ட ஒரு ப்ரமாணத்திற்கு இடமிருக்கிறதென்று எண்ணலாம். அவர் எழுதியிருக்கும் முக்கியமான புஸ்தகமாகிய "Appearance and Reality" என்பதன் பெயரைக்கவனித்தாலும் அந்த எண்ணம் ஊர்ஜிதப்படும். அத்துடன் அந்தப் புஸ்தகத்

தின் முதல் பாகத்தில் புத்தியின் வியாபாரத்தைக்கொண்டு காலதேசம், திரவ்யகுணம், காரியகாரணம், பேதாபேதம் என்னும் த்வந்த்வங்களுக்கு உட்படுத்தி நாம் தெரிந்து கொள்வதெல்லாம் வஸ்துவின் தோற்றம், ஆபாஸமே யல்லாது வஸ்துவின் நிஜஸ்வரூபமில்லை. 'It is appearance and not Reality' என்று தீர்மானித்திருப்பதையும் கவனித்தால் அவர் சாங்கர அத்வைதத்திற்கு மிகவும் ஸமீபத்தில் வந்துவிட்டாரென்று தோன்றும்.

ஆனால் வேறு சில வாக்கியங்களில் இதற்கு மாறாகவும் அவர் எழுதியிருக்கிறார். மேற்கூறிய ஆபாஸங்களையும் தோற்றங்களையும் கேவலம் துச்சமென்று தள்ளிவிடக் கூடாது. அவைகளுக்கும் ஓர் இருப்பிடம் வேண்டும். கடைசியில் பிரம்மம்தான் எல்லாவற்றிற்கும் ஆச்ரயம். மற்றுமுள்ள நம்முடைய ரஸானுபவங்கள், தர்மாதர்ம விவேகம் ஆகிய ஸர்வத்திற்கும் ப்ரம்மம்தான் ஆச்ரயம். இவைகளெல்லாம் ப்ரம்மத்தின் ஸ்வகதபேதங்கள். இவைகளெல்லாம் ஸமன்வயப்பட்டு ஸமஷ்டிரூபமாக விளங்குவது தான் ப்ரம்மஸ்வரூபம். இவைகளுக்கெல்லாம் ப்ரம்மத்தில் இடமில்லையென்று தள்ளிவிட்டால் ப்ரம்மம் நிஸ்ஸத்வமாகவும், நைராத்ம்யமாகவும் ஆய்விடும். "Reality set on one side and apart from all appearances would assuredly be nothing" என்று அவர் எழுதியிருக்கிறார். ஆகவே மித்யா ப்ரதீதிகளைக்கூடத் தள்ளமுடியாது. இவைகளும் மற்றுமுள்ள அநுபவங்களும் ஏதோ சொல்லமுடியாத விதத்தில் ஸமன்வயப்படுகின்றனவென்று அவர் சொல்லுகிறார். "Reality is not the sum of things. It is the unity in which all things coming together are transmitted".

பிரம்மம் எல்லாவிதமான பேதத்தையும் தாண்டியது, அது உலகப் பற்றில்லாதது என்று சில இடங்களில் சொல்லிவிட்டு வேறு சில அத்தியாயங்களில் பிரம்மத்தில் ஸ்வகத பேதங்கள் இருக்கின்றன, அவைகளெல்லாம் ஸமன்வயப்பட்டு ஏகரஸமாகப் பரிணமிக்கின்றனவென்றும் அவர்

எழுதுவதிலிருந்து அவர் மனத்தில் பிரம்மஸ்வரூபம் ஸகுணமா, நிர்குணமாவென்று தெளிவான தீர்மானம் ஏற்படவில்லை என்பது நன்றாகப் புலனாகிறது. தர்க்க திருஷ்டி (Intellectual point of view) மேம்பட்டிருக்கும் போது ஒருவிதமாகவும் சாஸ்திர திருஷ்டி (Intuitive point of view) உயர்ந்து நிற்கும்போது வேறுவிதமாகவும் அபிப்ராயப்படுகிறார். இந்த முரண்பாட்டைத் தீர்க்க வேண்டுமானால் ஒரே வழிதான் இருக்கிறது. சாஸ்திர திருஷ்டியென்னும் ஸம்யக்ஞானம் வஸ்துவின் ஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடி போதிக்கிறது. தர்க்க திருஷ்டியோ வஸ்துவின் ஆபாஸத்தைத்தான் எடுத்துக்காட்டுகிறது. ஆகையால் சாஸ்திர திருஷ்டி தான் உயர்ந்தது. தர்க்க திருஷ்டி அதற்குக் கீழ்ப்பட்டதென்று ஒப்புக்கொள்ள வேண்டும். சாஸ்திர திருஷ்டிதான் வேதப்ரமாணமென்பது. இத்தகைய பிரமாணத்தை மேனாட்டுத் தத்வ சிந்தனையாளர்கள் அங்கீகாரம் செய்யாததால் நிச்சய புத்தியில்லாமல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பரம்பொருளின் ஸ்வரூபத்தை நிர்ணயிக்கிறார்கள். ப்ராட்லி தம் புஸ்தகத்தின் கடைசி அத்தியாயத்தை **छिद्यन्ते सर्वसंशयाः** (சித்யந்தே ஸர்வ ஸம்சயா:) என்று முடிக்காமல் 'இறுதியில் நிற்கும் ஸந்தேஹங்கள்' (Ultimate Doubts) என்று முடித்திருப்பதற்குக் காரணமே ச்ருதி ப்ரமாணத்தைப்போன்ற ஒரு ப்ரமாணத்தின் பலம் அவருக்கு இல்லாததுதான். உறுதியான ஞானம் ச்ருதிமூலம் ச்ரவணம் மனனம்செய்து பிறகு நிதித்யாஸனம் செய்தால்தான் ஏற்படும்.

அடுத்த இதழில் இதுவரையில் சொல்லியிருக்கும் விஷயங்களையெல்லாம் ஒருமுகப்படுத்தி வேதப்ராமாண்யத்தின் முக்கியத்வத்தையும், அதை எந்த நிபந்தனைகளுக்கு உட்படுத்தி ஸ்ரீ பகவத்பாதாள் கையாண்டிருக்கிறார் என்பதையும் விவரித்துச் சொல்லி, "வேதப்ராமாண்யம்" என்று தலையங்கமிட்ட இந்தத் தொடர்ச்சியான கட்டுரையை உபஸம்ஹாரம் செய்யலாமென்று உத்தேசம்.

(தொடரும்)

கீதை ஸந்தேசம்.

(கீதைக் கடிதங்கள்)

கடிதம் — 4

சென்னை.

அன்புமிக்க நண்பருக்கு,

கருமயோகம்பற்றிக் கூறப்படுகிறது நான்காமத்தியாயத்திலே. விரிவில் புகுவதற்கு முன்னம் கருமயோகம் என்பதென்ன என்று ஒரு கணம் சிந்தித்துப்பார்ப்போம். கருமத்தில் தன்னகத்தே உள்ள எல்லா சக்திகளையும் ஈடுபடுத்துவதே கருமயோகமாகும். இம்முறையே கருமம் செய்து வருபவனுக்கு அதன் பயனில் நோக்கம் திரும்பாது; எனவே கருமத்தின் விளைவிலே ஆசையை நீக்கிக் கடமையென்னும் உணர்வோடு தொழில் புரிதலே கருமயோகமாகிறது. மற்றைக் கருமம் புண்ணிய பாவமாகிய தளையினை அமைத்து மனிதனைப் பிறப்பிறப்பு எனும் அவல நிலையில் ஈடுபடுத்திவிடும். கருமயோகம் வழுவாது செயப்பட்ட கருமம் இவ்வாறு ஸாதகனைக் கட்டுப்படுத்துவதில்லை. பிறப்பிறப்பிலிருந்து அவனை விடுவித்து இறைவனடியே சேர்த்து விடுகின்றது.

இம்முறையில் கருமம் புரிபவர்களும் இருக்கிறார்களா? செயற்கரிய இதனைச் செவ்வனே செய்வதற்கு ஆதர்சமாக யாரையேனும் காட்டமுடியுமா? இறைவனே இணையற்ற கருமயோகி. அவனுக்குத் திருவுள்ளத்தில் அவா என்பதே இருக்கமுடியாது. கிடைத்தற்கரிய பொருள் என்பதும் இறைவனுக்கு உண்டோ? இருப்பினும் அவன் ஓயாது கருமம் புரிவதிலேயே ஈடுபட்டிருக்கிறான். பாண்டவர்க்குத் தூது நடந்து தேரோட்டினான்; தேர்க்குதிரைகளுக்கு அவனே நீராட்டி உணவும் கொடுத்தான் என்று படித்திருக்கிறோம். ஜனகராஜனும் ஒப்பற்ற ஒரு கருமயோகி. தன்னலம் கருதாது ஸமூகத்துக்கு உழைத்த "பிறர்க்குரியாளர்" அனைவரும் கருமயோகிகளே.

கருமயோகத்தைக் கடைப்பிடிக்க விரும்பும் ஸாதகன் மனத்தில் பல ஐயங்கள் உதிக்கின்றன. பயனை விரும்பாது

கருமம் செவ்வனே புரிவதெப்படி? ஒரு நோக்கமில்லாமல் செயல்புரியத் தொடங்கினால் அது நல்ல முறையில் நிறைவேறுவதில்லை என்று அனுபவத்தில் நாம் அறிகிறோம். இது இவ்வாறானால் கருமயோகி புரியும் செயல் திறம்படச் செயப்படமாட்டாது. யோகியின் திறமைபற்றி முன்பே விரிவாகக் கூறியதெல்லாம் எப்படி உண்மையாகும்?

நோக்கமில்லாமல் செயல் புரிவது அறிவிலியின் தன்மையாகும். பயனில் கருத்தில்லாது கருமம் புரிதல் என்பது வேறு; நோக்கமில்லாமல் கருமம் புரிதல் என்பது வேறு. இந்தக் கடிதம் எழுதுவது என்ற செயலில் நான் ஈடுபட்டிருக்கிறேன். இச்செயலின் நோக்கம் கீதையின் மூன்றாம் அத்தியாயத்திற்கு விளக்கம் தருவதேயாம். இந்த நோக்கம் எனக்கு நன்றாக விளங்கவேண்டும்; கீதையை என் திறமையின் எல்லைகளுக்கு உட்பட்ட அளவில் நான் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். தெரிந்தவற்றைக் குழப்பமில்லாமல் தெளிவாக வெளியிடவேண்டும். கடிதத்தைப் படிப்பவர்களின் தேவை எப்படிப்பட்டது என்பதை அறிந்து கடிதத்தை அமைத்துத் தரவேண்டும். இவை எல்லாம் நோக்கத்தின்பாற்பட்டது. இவற்றை நன்கு அறிந்துகொள்ளாதவரை என் செயல் நல்ல முறையில் நிறைவேறாது. ஆனால் கடிதத்தை எழுதினால் எனக்குப் புகழ் கிடைக்குமா, பணம் கிடைக்குமா என்று மனத்தை அலைக்கழிப்பதுதான் பயன்கருதல் எனப்படுகிறது. தெரிந்ததை மற்றவர்க்குப் பயன்படுவதானால் உரைக்க வேண்டியது நம் கடனே என்ற மனப்பான்மையில் நான் கடிதம் எழுதி வரவேண்டும். கடிதங்களை எழுதிவருவதால் எனக்கு என்ன பயன் என்று நினைக்கத் தொடங்கினால் யோகம் சிதறிப்போகிறது. நோக்கத்துக்கும் பயனுக்குமிடையே உள்ள பெரும் வேற்றுமையை அறிந்துகொள்ளும் அளவுக்குத்தான் கருமயோகம் தெளிவாகும்.

நோக்கத்துடன் செயல் புரியவேண்டும்; பயனைக் கருதக்கூடாது; என்றால் பயன் எனும் தூண்டுகோல் இல்லாமல் கருமம் செய்வது எப்படி ஸாத்தியமாகும்?

பயன் கருதாது ஒருவன் முழு கவனத்துடன் சிரத்தை குன்றாமல் கருமம் புரிவது என்பது மனித ஜாதியிடம் எதிர்பார்க்கக்கூடியதா? இம்மாதிரி கேள்விகளுக்குப் பளிச் சென்று ஆணித்தரமான விடை கிடைப்பது இயலாது. ஆனால், நண்பரே, உங்கள் வாழ்க்கையைப்பற்றி நீங்கள் சிந்தித்துப்பார்த்தால் எத்தனை ஸந்தர்ப்பங்களில் தன்னலம் பாராது பயனையே நோக்காது செயல்புரிந்திருக்கிறோம் என்பது தெரியவரும். சென்ற ஆண்டு ராமநவமி உற்சவம் நடத்தியது — கடந்த வாரத்தில் பெயரை வெளியிட்டுக் கொள்ளாமல் அனாதை விடுதிக்கு ரூ. 5/– அனுப்பிவைத்தது — இன்று காலை போக்குவரவு மிகுந்த தெருவில் அந்தக் கிழவியை இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்திற்கு கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் விட்டது — இப்படி எத்தனையோ? பயன் என்பது செயலுக்கு முக்கியமான ஒரு தூண்டுகோல் — இதை மறுக்க முடியாது. ஆனால் பயனுக்கு அப்பாற்பட்ட தூண்டுகோல் பலவும் இயங்கிவருகின்றன — உங்கள் வாழ்க்கையிலும்தான், என் வாழ்க்கையிலும் தான். கருமயோகப் பயிற்சியின் காரணமாக முன்னிலும் அதிக அளவில் — நாம் ஏற்றுச் செய்யும் வேலைகளில் மிகுதியான, பெரும்பாலான, அநேகமாக முழுமையும் என்ற கணக்கிலே — பயன் கருதாமல் தொழில் படக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏதோ ஓர் உயர்ந்த மன நிலையில் ஒருநாள் ஒருமுறை பயன் நோக்காது தொழில் புரிவது என்றாரம்பிக்கும் இவ்வியக்கம் எப்பொழுதும் எந்நிலையிலும் வினைவினைக் கனவிலும் விரும்பாமலே செயலைச் செய்துவரல் எனும் யோகப் பெருநிலையில் முடிகின்றது.

இவ்வித யோகப் பெருநிலையில் ஸாதகனின் மனப் பண்பு ஒப்புயர்வற்றதாக இருக்கும். தன் தொழிலை ஊதியம் தரத்தக்க ஒரு நீர்க்குழாயாகக் கருதாமல் மனச் சாந்தியைப் பெருகவிடும் ஒரு காமதேனுவாக எண்ணத் தலைப்படுகிறான். சாதாரண மனிதன் "என் தொழிலின் மூலம் இன்று 3 ரூபாய் சம்பாதித்தேன்" என்று நினைத்து

விட்டால் "என் இன்றைய உழைப்பு 3 ரூபாய்க்குச்சமம்" என்று எண்ணத்தொடங்கிவிடுகிறான். கடையில் உள்ள பண்டங்களுக்கு விலைச்சீட்டு ஒட்டவைத்திருப்பதுபோல் தொழிலுக்கும் விலைச்சீட்டு ஒட்டப்படுகிறது. இதிலிருந்து அடுத்த நிலையை வெகு எளிதாக அடைந்து விடுகிறோம். "இந்தத் தொழிலைச் செய்யாமலேயே இந்த ஊதியத்தைப் பெறுவது எப்படி?" என்று எண்ணத்தொடங்குவதே அடுத்த நிலையாகும். இந்நிலையில் தொழில் புரிவது இரண்டாம் பட்சமாகிவிட ஊதியம் பெறுவதே முதன்மையான நோக்கமாக ஆகிறது. "தொழில் புரிவது என்கடன். அதற்குக் கிடைக்கும் ஊதியம் என் குடும்பத்தைக்காப்பாற்ற உதவுவதால் அதனை ஏற்றுக்கொள்கிறேன்" என்ற மன நிலையை வளர்ப்பதால்தான் கீழ்மையினிற் சேரும் மேற் சொன்ன வழியிலிருந்து நம்மையே மீட்டுக் கொள்ளமுடியும்.

மன நிலை பண்படைந்தால் தான் கருமயோகம் வளர முடியும் என்பது தெளிவு. வாழ்க்கையில் நாம், நன்றாகப் படித்து அறிந்தவர்களும் கூடத் தவறான செய்கைகளைச் செய்வதைப் பார்க்கிறோம். சில தருணங்களில் அவர்கள் பலவந்தமாக ஏதோ ஒரு விசையால் தள்ளப் பட்டவர்கள் போல் பாபச்செய்கைகளைச் செய்துவிடுகிறார்கள். இது ஏன்? இந்த விளங்காத புதிரைப்போட்ட பார்த்தனுக்கு இறைவன் அழகான நல்லுரை புகட்டித் தெளியவைக்கிறான். "அர்ச்சுனா, காமம் என்ற கொடும் வைரியே இதற்கெல்லாம் காரணம். ஒரு பொருளின்மேல் ஆசை வைத்தால் அதை அடைவதற்குப் பாபச்செயல்களையும் புரியத் தயாராகிவிடுகிறோம். விரும்பிய பொருள் கிடைக்கவில்லை என்றால் கோபம் பொங்கி எழுகின்றது. கிடைத்துவிட்டாலும் சாந்தி நிலைப்பதில்லை. அரும்பாடு பட்டுக் கிடைத்ததை எவரேனும் கவர்ந்து விடுவாரோ என்ற ஸந்தேகமும் கவலையும் உள்ளத்தைச் செல்லரிக்கின்றன. ஆகவே வெல்வதற்கு அரிய அவா என்னும் இந்தக் கொடிய வைரியை அழித்துவிட்டால் சாந்தி பிறக்கும்" என்கிறார்.

அவாவினைப் பெருக விடுவதாலேயே இன்றைய உலகம் சாந்தியற்ற அவல நிலையில் உழல்கிறது. காமத்தை அடக்குவது மோக்ஷ ஸாதனம் என்று கருதப்படுகின்றது உண்மையே; ஆனால் இங்கே இம்மண்ணுலகத்தில் நிலைத்த இன்பமும் மனச்சாந்தியும் பெறுவதற்குக் காமங்களைக் குறைத்து வாழப் பழகவேண்டும். கருமயோகம் அமையப்பெறாமல் கெடுப்பது காமமேயாகும் என்பதைச் சாதகர்கள் எல்லோரும் அறிய வேண்டும். காமத்தை—இதுவேண்டும், அதுவேண்டும் என்ற பேராவலை—அழிப்பது என்பது எளிதல்ல. எந்தப்பொருளையும் மனத்தால் ஈடுபாட்டுடன் சிந்தித்து வந்தால் அதன்மேல் ஓராவல் பிறப்பது அனுபவத்தில் கண்ட உண்மை. அவ்வாறு நினைக்கும் பழக்கத்தைக் குறைத்து ஆவல் தோன்றாதபடி எச்சரிப்பாக இருக்கப் பழகவேண்டும். "அப்பொருள் கிடைப்பதால் என் இன்பநிலை பெருகப்போவதில்லை. அது இல்லாமல் எத்தனை நண்பர்கள் மகிழ்வுடன் வாழவில்லையா?" என்ற விவேகம் வளரவேண்டும். கருமயோகம் கைவரப் பெற வேண்டும், ஆன்மீகத்துறையில் முன்னேற்றமடைய வேண்டும் என்று துடிக்கும் சாதகன் ஆவல் பெருகாத வண்ணம் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

அன்புள்ள,

அ. வெ. சுப்பிரமணியன்.

* * *

अर्थी करोति दैन्यं लब्धार्थो गर्वमपरितोषं च ।
नष्टधनश्च स शोकं सुखमास्ते निःस्पृहः पुरुषः ॥

யாசகன் ஏழ்மையைக் காட்டுகிறான். பணமுள்ளவன் கர்வமும் அதிருப்தியும் கொள்கிறான். பணமிழந்தவன் சோகத்தை அடைகிறான். ஆசையற்ற புருஷன் ஸுகமாக இருக்கிறான்.

கேனோபநிஷத்

(ஓர் நாடகம்)

[V. S மணி அய்யர், கிருஷ்ணாபுரம்.]

(முன் தொடர்ச்சி)

அங்கம் 1. காட்சி 2.

(திரை தூக்கப்படுகிறது)

[ஆசிரமக் காட்சி:—ஆசிரமத்தின் மற்றொரு புறத்தில் ஜைமினி புலித்தோலின்மேல் வீராஸனத்தில் வீற்றிருக்கிறார். ஒருபக்கத்தில் மான்குட்டி வந்து நிற்க அதற்குப் புல் எடுத்து ஊட்டுகிறார். மற்றொரு பக்கத்தில் பூனையும் கிளியும் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருக்கின்றன. ஆசிரமத்தின் உள்ளிருந்து தோத்திரப் பாடல்களின் இன்னிசை, பசு நெய்யின் மணத்துடன் கலந்து வெளிவந்து எங்கும் பரவுகிறது.

கௌதமர், தலவகாரர் இன்னும் சில சீடர்கள் பிரவேசித்து,

"குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மஹேச்வர:
குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

என்று சொல்லிக்கொண்டு குருவை வணங்கி, ஸாஷ்டாங்கமாகத் தண்டன் ஸமர்ப்பிக்கிறார்கள். ஜைமினியும் ஆசீர்வாதம் செய்துவிட்டு எழுந்திருக்க, எல்லோரும் சேர்ந்து,

"ஓம் நமோ ப்ரஹ்மாதிப்யோ ப்ரஹ்மவித்யாஸம்ப்ரதாய கர்த்ருப்யோ வம்சரிஷிப்யோ நமோ குருப்ய: ।

"யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை ।
தம் ஹ தேவ-மாத்ம-புத்தி-ப்ரகாசம்
முமுக்ஷுர் வை சரணமஹம் ப்ரபத்யே ॥"

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

[என்று மங்களாசரணம் பாடுகின்றனர். எல்லோரும் தங்கள் தங்கள் இடங்களில் அமருகின்றனர்.]

ஜைமினி :— குழந்தைகளே ! உங்களுக்கு வேதமாதா ஸகல கல்யாண குணங்களையும் அருளுவாளாக. கௌதமா! முன்பு சிரவணம் செய்த விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்தாயா ?

கௌதமர் :— ஸ்வாமி, எண்ணுந்தோறும் ப்ரஹ்ம சிந்தனை வியப்பை ஊட்டுகிறது. ஒரு சமயம் நன்றாய்—தெள்ளத்தெளிய—தெரிந்ததுபோல் தோன்றுகிறது. அடுத்த கணத்திலேயே ஒன்றும் விளங்காமல்—மனத்துக்கும் அகப்படாமல்—ஓடிவிடுகிறது.

தலவகாரர் :— தங்கள் உபதேசங்களைக் கேட்டது முதல் அதையே நினைத்து மனனம் செய்துவந்தேன். நன்றாய் விளங்குகின்றன. ப்ரஹ்மத்தை நான் அறிந்துகொண்டேன்.

ஜைமினி :— சிஷ்யர்களே ! துவக்கத்திலேயே உங்களை ஒன்று எச்சரிக்க விரும்புகிறேன். எல்லாம் அறிந்ததாய் எண்ணிவிடாதீர்கள். நீங்கள் தெரிந்துகொண்டதாய் எண்ணுவது மிகவும் சொல்பமே. தலவகாரா ! வத்ஸா ! நன்றாகத் தெரிந்துகொண்டேன் என்று நீ எண்ணுவதில் இந்த ப்ரஹ்மத்தின் எந்த ரூபத்தை (இங்கு) அறிந்திருக்கிறாயோ அது அற்பம் என்பது நிச்சயம். இந்த ப்ரஹ்மத்தின் எந்த ரூபத்தைத் தேவதைகளிடம் அறிந்திருக்கிறாயோ அதுவும் அப்படியே அற்பம்தான். ஆகையினால் ப்ரஹ்மம் உனக்கு இன்னும் விசாரிக்கவேண்டிய நிலையிலேயே இருக்கிறது. மனனம் செய்து நன்றாக ஸாங்கோபாங்கமாக விசாரித்து அறியவேண்டியதாகவே இருக்கிறது. இன்னும் நீ பூர்ணமாக அறிந்தபாடில்லை.

தலவகாரர் :— குருநாதா ! எனக்கு ஒன்றும் தீர்மானமாகத் தெரியவில்லை. விதை ஊன்றிய தாங்களே மேலும் தண்ணீர் விட்டு வளர்க்கவேண்டும். தங்கள் உபதேசமாகிற அமிருத மழையினால், வளம் அடைந்து ஞானக் கனியை நாங்கள்பெற அருளவேண்டும் ஸ்வாமி.

ஜைமினி :— ஓர் ஏழை நாட்டுப்புறத்தான், ராஜதானிக்குச் சென்றதும், அரசர் வாழும் அரண்மனைக்குப் போகிறான். அங்கே முன் வாசற் பூஞ்சோலையைக் கண்டு மகிழ்வுற்று மாளிகையைக் கண்டதாக மயக்கம் அடைகிறான். தோரணவாயிலில் கண்ட அலங்காரங்களைப் பார்த்தே பிரமித்துவிடுகிறான். அரண்மனைக்கு உள்ளிருக்கும் செழிப்பையும் அணிகளையும் சுகபோகங்களையும் கேளிக்கைகளையும் அறிந்து பழகி உணரவேண்டுமேயல்லாது விவரித்துச் சொல்லமுடியாது. அதுபோலவேதான் பிரஹ்ம ஸாக்ஷாத்காரமும். முதல் பாடத்திலேயே அறிந்து விட்டதாய்ப் பிரமை தட்டும். அதில் கலங்கிவிடாதீர்கள். நம்பி மோசம் போகாமல் ஜாக்கிரதையாக இருந்து தொடர்ந்து ஆத்மவிசாரணை செய்யவேண்டும்.

கௌதமர் :— பூஜ்ய குருவே ! கவனமாகவே கேட்டு வருகிறோம். மேலும் விஸ்தாரமாகவே சொல்லுங்கள்.

ஜைமினி :— வளருகின்ற ஒரு கொடி கதிரவனை நாடுவது போலவும், ஜலம் பள்ளத்தாக்கைப் பார்த்து ஓடுவதுபோலவும், மனிதனுடைய மனமும் பரம்பொருளையே நாடுகிறது. ஆனால் அந்த ப்ரஹ்மமோ இந்திரியங்களால் அறியமுடியாதது. நாம் பிரமாணங்களால் தெரிந்துகொள்வதெல்லாம் பரோக்ஷ ப்ரஹ்மத்தைப் பற்றித்தான்.

கௌதமர் :— அப்படியானால் ப்ரஹ்மத்தை அபரோக்ஷமாக அறிவது எப்படி ? அதையே ஆரம்பத்தில் கற்பது நலம் அல்லவா ?

ஜைமினி :— குழந்தாய், தலவகாரா, இந்தப் பூனைக்குக் குடிப்பதற்குக் கொஞ்சம் பால் கொண்டுவா.

(தலவகாரர் உள்சென்று ஒரு தொன்னையில் கொஞ்சம் பாலுடன்வந்து, பூனைக்குப் பக்கத்தில் வைக்கிறார். அந்தப் பூனையும் பாலைப்பருகக் குருவின் அனுமதியை எதிர்பார்க்கிறது)

ஜைமினி :— வத்ஸா, நான் பால்மட்டும்தானே கொண்டு வரச்சொன்னேன். தொன்னையை எதற்காகக் கொண்டு வந்தாய் ? தொன்னையை நீக்கிவிட்டுப் பாலைமட்டும் கொண்டுவா.

தலவகாரர்:— (குழப்பத்துடனும் வியப்புடனும்) ஸ்வாமி, அது எப்படிச் சாத்தியமாகும்? தொன்னையில்லாமல் க்ஷீரம் எப்படிக் கொண்டுவரமுடியும்? பாத்திரம் இல்லாமல் பாலைக்...கொண்டுவர...முடியாதே.

ஜைமினி :— சரி போகட்டும்! ஹே மார்ஜாலமே! பாலைக் குடித்துவிட்டுச் சுகத்துடன் சுகமாய் விளையாடு. வத்ஸா! தலவகாரா! எப்படிப் பாத்திரமில்லாமல் பாலை எடுக்கமுடியாதோ அதுபோலவே ப்ரஹ்மத்தையும் உங்கள் புத்தியில் கொண்டுவர-அறிவிக்க-ஒரு பாத்திரம் தேவை. அவைகள் தாம் முந்தின பாடங்களில் சொன்ன இந்திரியக் கூட்டங்கள் (கண்ணுக்குக் கண்ணாகவும் முதலியவை). ஸகுண ப்ரஹ்மமான தேவதா மூர்த்திகளும் அப்படியேதான் நிர்க்குணமான ப்ரஹ்மத்தைக் காட்டத் துணைபுரிகின்றன. ஆகையினால் அவைகளை அறிந்தவுடன், உண்மையை அறிந்துவிட்டதாகப் பெருமிதம் அடையாதீர்கள்.

தலவகாரர் :— பின் உண்மையை அறிவது எப்படி?

ஜைமினி :— நன்றாய் விசாரணை செய்தால் ஸமாதியில் தெரியும்.

[சிறிது நேரம் எல்லோரும் மௌனமாகத் தியானத்தில் இருக்கின்றனர். பிறகு பேச்சு மறுபடியும் ஆரம்பமாகிறது.]

தலவகாரர் :— இப்போது ப்ரஹ்மம் அறியப்பட்டது என்று நினைக்கிறேன். எப்படியென்றால் "நான் நன்றாகத் தெரிந்துகொண்டேன் என்று (இப்போது) நினைக்கவில்லை. அறியவில்லையென்றோ, அறிந்தேன் என்றோ எண்ணவில்லை. எங்களில் எவன் 'அறியவில்லையென்றோ' 'அறிந்தேன் என்றோ' எண்ணவில்லை என்று இதை உணர்ந்தவனோ அவன்தான் அதை (ப்ரஹ்மத்தை) உணர்ந்தவன்; நன்கு தெரிந்தவன். அது அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டதென்றும், அறிந்த பொருள்களைவிட வேறு என்றும் நான் அறிகிறேன். ஆனால் அறியவுமில்லை.

கௌதமர் :— ஸ்வாமி, என்னை அறியேன் நான்; என்னை அறிந்தேன் நான், என்று சொல்லுவது முன்னுக்குப் பின் முரண் அல்லவா? அது நகைப்புக்கும் இடம் அல்லவா!

ஜைமினி :— வத்ஸா! கௌதமா! அதில் நகைப்புக்கு இடம் எங்கேயிருக்கிறது. அறிபவன் அறியப்படுவது என இருபொருள் இன்மையால் — அனுபூதி உண்மையில் இரண்டும் அற்றதால்-தலவகாரர் கூற்று முற்றும் சரியே!

கௌதமர் :— குருநாதா! இன்னும் கொஞ்சம்கூட விளக்கமாக அருளவேண்டும்.

ஜைமினி :— "எனக்கு நன்றாகத் தெரியுமென்று நான் எண்ணவில்லை." நாமரூபங்கள் உள்ள பொருள்களை அறிவதுபோல் ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. இந்தக் கமண்டலம், ஜலபாத்திரம், மரவுரி முதலிய சாமான்களை அறிவதற்கும் ப்ரஹ்மத்தை அறிவதற்கும் வித்தியாசம் உண்டு. ஜாதி, குணம், க்ரியை, ஸம்க்ஞை முதலிய தர்மங்கள் இல்லாதது ப்ரஹ்மம். அகண்டமானது அது. சிறியது பெரியது, குட்டை நீளம், பிறப்பு இறப்பு, நிறம், உருவம், பெயர் முதலிய விகாரங்களும் குறிகளும் அதற்கு இல்லை. அதை அறிந்ததாய்ச் சொல்வது வீண் பிரமை. ஆகவே ப்ரஹ்மத்தை எனக்கு நன்றாகத் தெரியுமென்று எண்ணவில்லை. அது முற்றிலும் சரியே.

பிறகு அடுத்த வாக்கியத்துக்கு வருவோம். "மீண்டும் விசாரித்தபின் இப்போது அறியப்பட்டதென்று நினைக்கிறேன்" இதன் பொருள் என்னவென்றால், ஸமாதியில் ப்ரஹ்மத்தைத் தெளிவாக அறியமுடியும் என்பது தான். ப்ரஹ்மத்தைப்பற்றித் தெரிந்துகொள்வது முடியாது. ஆனால் ப்ரஹ்மமாகத் தெரிந்துகொள்ளலாம். கடலிலுள்ள நீரைக் காய்ச்சி உப்பு எடுத்து அந்த உப்பாலேயே ஒரு பொம்மை செய்து ஒரு நூலில் பிணைத்து, கடலில் போட்டுக் கொஞ்சம் கழித்து நூலை வெளியில் எடுத்தால் பொம்மை இருக்குமா? அதுபோலவே ஸமாதியில் ப்ரஹ்மத்துடன் இரண்டறக் கலந்துவிட்டால் அதை வர்ணிக்க முடியுமா? பால் பாயஸம் நன்றாயிருக்கிறது என்று வால்மீகியைப்

போன்ற மஹாகவி வந்து வர்ணித்தாலும், அந்தப் பாயஸத்தை உண்ட ருசி கிடைக்கப் பெறுமா? ஒவ்வொருவரும் தனித்தனியே தியான ஸமாதியில் அமர்ந்து அதை அனுபவிக்கவேண்டும். அப்போதுதான் அபரோக்ஷமாக ப்ரஹ்மஞானம் அடைவீர்கள்.

தலவகாரர் :— இந்த ப்ரஹ்மஞானத்தால் பெறும் பேறு என்னவோ? அதையும் விவரமாகக் கூறவேண்டும்.

ஜைமினி :— அந்த ப்ரஹ்மம் அமதம் (அறியப்படாதது) என்பது எவன் மதமோ (கொள்கையோ) அவனால் அது அறியப்பட்டதாம். அறியப்பட்டது என்பது எவன் மதமோ அவன் அறியவில்லையாம். அறிவாளிகளுக்கு அது அறியப்படாதது. அறிவீனர்களால் அறியப்பட்டதாய்க் கருதப்படுவது. "ஒவ்வொரு போதத்திலும் விளங்கும் அது, அறியப்படாமல் அறியும் வஸ்துவாக நிற்கிறது." என்பது முடிவான மதம் (கருத்து).

அதனால் அதை அப்படித்தெரிந்தவன் சாகாத் தன்மையை அடைகிறான். அமரத்வம் கிட்டுகிறது. ஆத்மாவிடமிருந்து உண்மையான வீரியத்தை அவன் பெறுகிறான். அந்த ப்ரஹ்ம வித்யையாலேயே சாகா நிலையை எய்துகிறான். இங்கேயே (இப்போதே) ஒருவன் உண்மையை அறிந்தால் அவன் அழியாமல் இருக்கிறான். இங்கே அறியாவிட்டால் பெரும் அழிவு ஏற்படுகின்றது அவனுக்கு. பொருள் தோறும் ஆத்மாவை ஆராய்ந்து கண்டுகொண்ட தீரர்களே இவ்வுலகத்தைவிட்டு அமரர்கள் ஆகின்றனர். இந்த ஆத்மாவைப் பலமில்லாதவன் அடையமுடியாது. உண்மையான பலம் ஆத்ம பலம்தான். அந்தப்பலத்தாலேயே அமிருத நிலை ஏற்படும்.

அது உங்கள் பிறப்புரிமை. அதை உடனே நீங்கள் அடையலாம். அதை அறிந்தால் (என்ன இல்லாவிட்டாலும்) நீங்கள் எல்லாம் பெற்றவர்கள் – உடையவர்கள் – ஆகிறீர்கள். அதை இழந்துவிட்டால் (வேறு என்னவெல்லாம் பெற்றிருந்தபோதிலும்) பெரும் நஷ்டம்

அடைவீர்கள். ஒன்றும் இல்லாதவராகவே கணிக்கப்படுவீர்கள். ஆகையினால் புத்திசாலிகள், இந்திரிய வாழ்க்கையை நீத்து, எல்லாப் பொருள்களிலும் ப்ரஹ்மத்தைக்கண்டு அமரத்வம் அடைகிறார்கள்.

சிஷ்யர்கள் :— (எல்லோரும் எழுந்து) குருநாதரே! தங்கள் உபதேசத்தால் நாங்கள் தன்யர்களானோம். அநேக கோடி நமஸ்காரம்.

(பிறகு எல்லோரும் சேர்ந்து பாடுகின்றனர்.)

"சிதானந்தரூபம், சிவோஹம், சிவோஹம்,
சுத்தம், பூர்ணபோதம் ஸாக்ஷாத்காரம்
பேதத்தை நீக்கு, பயத்தை ஒழி
ப்ரம்ஹத்தைச் சமாதியில் உணர்வாய்
அங்கே அடங்கித்துயில்வாய்
அபேதத்தில் ஆனந்தம் காணுவாய்
அக்ஞானம் விலகி இன்பம் அடைவாய்.
சிதானந்தரூபம், சிவோஹம், சிவோஹம்"

(திரை விழுகிறது.)

(தொடரும்)

* * *

சிந்தனை நின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே

— மாணிக்கவாசகர் திருவாசகம்.

அபிராமி அந்தாதி.

விழுத்துணை

[கி. வா. ஜகந்நாதன்]

அபிராமியம்மையின் சமுதாய சோபையை முதலில் தியானித்துக் கொள்கிறார் அபிராமிபட்டர். நெடுந்தூரத்தில் ஒருவர் வந்தால் அவருடைய உருவம் பிழம்பாகத் தெரியுமே அன்றி, அவருடைய அங்கங்களின் விரிவு தெளிவாகத் தெரியாது. அருகில் அணுக அணுக உறுப்பு நலன்கள் தெரியவரும். இங்கே அம்பிகை பிரசன்னமாகும்போது முதலில் அவளுடைய திருமுகத்தேசு புலனாகிறது. அவளுடைய திருமேனி முழுவதும் பரவிப்படர்ந்து முழுமை பெற்ற லாவண்யம் தெரிகிறது. இனிமேல் அப் பெருமாட்டியின் எழில் தழும் உறுப்புக்களைப்பற்றிச் சொல்லப் போகிறார். இப்படிச் சொல்வது ஒரு மரபு.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் முருகனுடைய கோலத்தை எடுத்துரைக்கிறார். அவனுடைய கால், கை, முகங்கள் முதலியவற்றின் அழகையும் சிறப்பையும் சொல்கிறார். எல்லாவற்றிற்கும் முதலில் அவனுடைய ஒளியுருவப் பிழம்பைக் காட்டுகிறார். நீல மயிலின்மேல் செக்கச் செவேலென்ற வண்ணத்தோடு முருகன் எழுந்தருள்வதைப் பார்த்தால் கடலின் மேல் உதயசூரியன் தோன்றுவதைப்போல இருக்கிறதாம்.

> **உலகம் உவப்ப, வலன்ஏர்பு திரிதரு**
> **பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு**
> **ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி.**

என்று தொடங்குகிறார். திருமுருகாற்றுப்படையின் தொடக்கத்தில் இளம் செஞ்ஞாயிற்றைக்காண்பது போலவே அபிராமி அந்தாதியின் ஆரம்பத்திலும் "உதிக்கின்ற செங்கதி"ரைக் காணுகிறோம்.

அம்பிகையின் திருமேனி செக்கச் சிவந்தது. அதனால் உதய ஞாயிற்றையும் உச்சித் திலகத்தையும் மாணிக்கத்தையும் மாதுளம் பூவையும் மின்னற் கொடியையும் குங்குமக் குழம்பையும் உவமையாகச் சொன்னார்,

அவருடைய எழில் மேனியை உள்ளவாறே சொல்லிக்காட்ட முடியாது. அதனால் உவமையினாலே சொல்லப்புகுந்தார்.

பொதுவாகத் திருக்கோயில்களில் சிவபெருமானை வணங்கிவிட்டு அம்பிகையை வழிபடுகிறோம். அம்மையின் தோத்திரங்களைப் பாடுகிறோம். அம்மையைப் பற்றி நாம் பல செய்திகளை அறிந்திருக்கிறோம். படங்களிலும் அம்மையின் திருவுருவத்தைப் பார்க்கிறோம். உமாதேவி பார்வதி என்று போற்றும் அன்னை பச்சை வடிவினள் என்பதுதான் யாவருக்கும் தெரியும். ஆனால் இங்கே அபிராமிபட்டர் அம்மையைச் செவ்வண்ண மேனியினளாகத் துதிக்கிறார்.

இந்த வேறுபாடு — இந்த உண்மை — ஸ்ரீ வித்தியா உபாசகர்களுக்குத் தெரியும். சைவர்கள் பரசிவம் என்றும் வைணவர்கள் பரவாசுதேவன் என்றும் கடவுளைப் பாராட்டி மற்றவர்கள் யாவரும் அவர்களிலும் தாழ்ந்தவர்கள் என்று சொல்வார்கள்; அல்லது தனிமுதற் கடவுளைச் சைவர்கள் பரசிவம் என்றும், வைணவர்கள் பரவாசுதேவன் என்றும் வழிபடுவார்கள். பரம் என்ற சொல் மேலானது என்னும் பொருளுடையது. அவ்வாறே ஸ்ரீ வித்தியா உபாசகர்கள் அம்பிகையைப் பராசக்தி என்று கொண்டாடுவார்கள். ஸ்ரீ ராஜராஜேசுவரி, மகாதிருபுரசுந்தரி என்றெல்லாம் வழங்கும் அந்தப் பரமேசுவரி திரிமூர்த்திகளையும் பிறதேவர்களையும் தன்னுடைய ஆணையைத் தாங்கிநடத்தும் அதிகாரிகளாகக் கொண்டு விளங்குகிறாள் என்று கொள்வர். துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற மூன்று சக்திகளும் அந்தப் பெருமாட்டியின் கூறுகளாக இருந்து மும்மூர்த்திகளினிடமிருந்தும் அவரவர்களின் தொழிலைச் செய்விப்பவர்கள். அந்த வகையில் சிவனுடைய சக்தியாக இருக்கும் உமாதேவி பச்சை நிறம் உடையவள். லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய இருவர்களையும்விட உமாதேவியினிடம் அம்பிகையின் கூறு மிகுதி.

எல்லோருக்கும் மேலாக விளங்கும் அம்பிகையாகிய ஸ்ரீ ராஜராஜேசுவரி செய்ய நிறம் உடையவள். செம்மை என்பது இந்த நாட்டில் நிறைவுக்கும், முழுமைக்கும்,

உயிர்த் தன்மைக்கும், நேர்மைக்கும், நன்மைக்கும், மங்கலத்துக்கும் அடையாளம். அம்பிகை எங்கும் நிறைந்தவளாய், முழுமுதற் பொருளாய், உயிர்களுக்கு உயிராய், நேர்மையான அருளாணையைச் செலுத்துபவளாய், நலந்தரும் மாதாவாய், சர்வமங்கலையாய் விளங்குகிறாள் என்பது அவளுடைய செவ்வண்ணத்தால் பெறப்படும் குறிப்பாகும். அது வெறும் சிவப்பு அன்று; தேசுடைய சிவப்பு; ஒளிவிடும் சிவப்பு; கண்ணைக் குளிர்விக்கும் சிவப்பு. அந்தச் சிவப்புக்குத்தான் முதல் பாட்டில் ஆறு உவமைகளைச் சொன்னார் அபிராமிபட்டர்.

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம்,
உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது,
மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும
தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன்
விழுத்துணையே.

[எழுகின்ற செஞ்சூரியன், உச்சியிலே மங்கையர் வைத்துக் கொள்ளும் குங்குமத்திலகம், அறிவுடையவர்கள் மதிப்பிடுகின்ற மாணிக்கம், மாதுளம்பூ, தாமரை மலரில் உள்ள திருமகள் துதிசெய்கின்ற மின்னல்கொடி, மெல்லிய நறுமணமுடைய குங்குமக் கலவைநீர் என்று அன்பர்கள் உவமையாக எடுத்துச்சொல்கின்ற திருமேனியை உடைய அபிராமியம்மை எனக்கு மேலான துணையானவள். உச்சி – தலையின் உச்சி; உணர்வு – ஞானம்; அறிவு. கடி – நறுமணம், தோயம் – நீர்]

அபிராமி என்பதற்குப் பேரழகுடையவள் என்பது பொருள். அம்மையின் எழில், கண்டாரைத் தன்மயமாக்கிப் பேரின்பத்துள் ஆழ்த்துவது. "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி" என்று அபிராமி அந்தாதியில் பின்னே வருகிறது.

"இத்தகைய அம்பிகை என் விழுத்துணை" என்று பாட்டை முடிக்கிறார் ஆசிரியர்.

விழுத்துணை – மேலான துணை. மனிதர்களுக்கு வாழ்க்கையில் பலவகையான துணைகள் இருக்கின்றன,

ஜடமான கருவிகளும், உயிருடையவையும், மனிதர்களும் வெவ்வேறு வகையில் துணையாக உதவுகின்றன. நெடுந்தூரம் நடப்பவர் காலுக்குச் செருப்புத் துணை. வெய்யிலில் நடப்பவருக்குக் குடை துணை. ஆற்றைக் கடப்பவருக்கு ஓடம் துணை. போர் புரிபவனுக்குப் படைக்கலம் துணை. சட்டிபானை வனைபவர்களுக்குத் தண்ட சக்கரங்கள் துணை. இவை யாவும் ஜடப்பொருள்கள். பால் வேண்டி நிற்பாருக்குப் பசுத்துணை. இராக்காவல் வேண்டுமானால் நாய் துணை. நெடுந்தூரம் போகக் குதிரை துணை. இவை யாவும் உயிருடைய ஜீவர்கள். குழந்தைக்குத் தாய் துணை; தகப்பனும் துணை. மனைவிக்குக் கணவன் துணை. குடிகளுக்கு மன்னன் துணை. இவர்கள் மனிதர்கள். இந்த மூவகைத்துணைகளும் பொதுவாக மனிதனுடைய உடம்பைப் பாதுகாக்கவும் அதைக்கொண்டு நல்வாழ்வு வாழவும் உதவிபுரிகின்றன. உடம்பு, உள்ளம், உயிர் என்ற மூன்றில் ஒன்றைவிட ஒன்று சிறந்தது. உள்ளத்தில் கலக்கம் வந்தாலும், அச்சம் வந்தாலும் பாதுகாத்து நலம் செய்யும் துணைவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களும் ஞானகுருக்களும் உள்ளத்துக்குத் துணையாக இருக்கிறார்கள். உடம்புக்குத் துணையாக நிற்பவர்களைவிட உள்ளத்துக்குத் துணையாக நிற்பவர்கள் சிறந்தவர்கள்; உடம்பைவிட உள்ளம் சிறந்தது ஆகையால். அதுபோலவே உயிருக்குத் துணையாக யாரேனும் இருந்தால் அவர்கள் எல்லாத் துணைவர்களையும்விட மேலானவர் என்று உறுதியாகக் கூறலாம். அவர் யார்?

நம்முடைய உயிர் உடலில் இருக்கிறது. உயிரும் உடலும் சேர்ந்தே மனிதன் ஆகிறான். உயிருள்ள உடம்பைப் பிறப்பித்தவர்கள் தாயும் தந்தையும். அவர்கள் இந்த உயிருக்குத் துணையாவார்களா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கும். காலன் உயிரைக் கொண்டுபோகும்போது தாய் தந்தையர் அதைக் காப்பாற்ற இயலாது. ஆருயிர்க் காதலன், ஆருயிர்க் காதலி என்று பாராட்டி அன்பு செய்யும் காதலர்களை உயிர்த்துணை என்று சொல்லலாமா? அவர்கள் வாழ்க்கைத்

துணையேயன்றி உயிர்த்துணை ஆகமாட்டார்கள். காதலி தன் காதலன் உயிரைக் காப்பாற்ற முடியாது; அப்படியே காதலனும் தன் காதலி உயிரைக் காப்பாற்ற முடியாது.

இந்த உயிர் இந்த உடம்போடு இருக்கும்போது உடனிருந்து உணவு தந்து வளர்க்கிற தாய்தான் எல்லோரையும்விடச் சிறந்த அன்புடையவள். அவள் இந்த ஒரு பிறவியில் தன் அன்பைச் சொரியலாம். நமக்கு முன் அவள் இறந்தாலும், அவளுக்கு முன் நாம் இறந்தாலும் அவளுடைய அன்பு நமக்குப் பயன்படாமல் போய்விடும். அப்படியின்றி உயிர் எங்கே சென்றாலும் எந்தப் பிறவி எடுத்தாலும் அங்கும் வந்து நமக்குத்துணை நிற்கும் யாரேனும் இருந்தால் அவளை உயிருக்குத் துணையென்றும் மேலான துணையென்றும் சொல்லலாம். அவள் தான் அபிராமி.

அவள் எல்லாக்காலத்தும் எல்லா இடத்தும் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்குகிறாள். அவளுடைய கருணைக்கு எல்லையில்லை. ஆருயிர்களுக்குத் தாயாக விளங்கும் இந்தப் பெருமை எல்லாவற்றையும் விடச் சிறந்தது. அதனால் தான் லலிதாம்பிகையின் நலங்களையெல்லாம் சொல்லப்புகுந்த திருநாம வரிசைகளில் முதல் திருநாமமாக "ஸ்ரீமாதா" என்பதை லலிதா சகஸ்ரநாமம் வைத்துப் போற்றுகிறது. நாவுக்கரசர் இறைவனை "தொடர்ந்து நின்ற என் தாயானை" என்று பாராட்டுவார்.

உயிருக்கு எக்காலத்தும் துணையாக நின்று பாதுகாப்பவள் அம்மையாதலால் அவளே மேலான துணையாக விளங்குகிறாள். உயிருக்கு மட்டுமா துணை? உடம்புக்கும் உள்ளத்துக்குங்கூட அவளே துணையாக நின்று அருள் பாலிக்கிறாள். உடம்பின் ஆதாரங்களில் பல உருவங்களாக நின்று பாலிக்கிறாள். உள்ளமாகிய புண்டரீகத்திலே வீற்றிருந்து இயக்குகிறாள். உயிருக்குயிராகி நலம் செய்கிறாள். அதனால் அவளே விழுத்துணை. அவள் ஒருத்தியே விழுமிய துணை; வேறு யாரும் இல்லை. இந்தக் கருத்தினால் தான்

"அபிராமி என்றன் விழுத்துணையே"

என்று பாடிப் பாட்டை நிறைவேற்றி மனநிறைவு பெற்றார் அபிராமி பட்டர்.

ஸ்ரீ தேவி பாகவதக் கதைகள்

3. ஹயக்ரீவர்

[P. R. நாராயண சர்மா]

ஆதிதேவனும் ஜகந்நாதனும் ஸகலத்திற்கும் கர்த்தாவாயும் காரணபூதராயும் உள்ள ஜனார்த்தனர், வேதம் புகழ் பாட வானவர்க்கும் அடைக்கலமாய் உள்ளவர். என்ன காரணத்தினால் 'ஹயக்ரீவர்' (குதிரைத் தலையுள்ளவர்) ஆகமாறினார்? வில்லின் நுனிபட்டுச் சிரசு துண்டிக்கப்பட்ட வரலாறு, கேட்போரைத் திடுக்கிடச் செய்கிறது; மனம் பதறுகிறது. இப்படி ஒரு ஸம்பவம் நிகழக் காரணம் என்ன? இதற்கு யார் பொறுப்பாளி? என்ற ஸந்தேஹம், புதிதாக இன்று நமக்கு மட்டும் ஏற்பட்டதல்ல; ஒரு காலத்தில் தபோநிதிகளாகிய நைமிசாரண்யவாசிகளுக்கும், இதன் விபரம் அறிய ஆவல் மிகுந்து, சூதபுராணிகரைப் பார்த்து "கேட்போர் மனம் குழைந்து, உடல் புல்லரிக்கும்படி கதை சொல்லும் திறமை மிகுந்த, ரோமஹர்ஷணர் என்ற முனிவரின் புதல்வரே! திருமால் ஹயக்ரீவராக உருவம் தாங்கியதாகக் கூறினீர்களே! அதன் காரணம் என்ன? தேவர்களது அசிரத்தையினாலும், கவனக் குறைவினாலும் நேர்ந்ததா? அல்லது யாரிடமாவது சாபம் பெற்றாரா? அல்லது பக்த பராதீனனாகிய பரந்தாமன் தன் அன்பர் துயர்தீர்க்க அவ்விதம் மாறினாரா? இதன் விபரங்களை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்" எனக் கேட்கச் சூதரும், "முனிவர்களே! தேவ தேவனாகிய திருமால் எவ்வித உருவம் எடுத்தாலும் அதற்குப் பல காரணங்கள் உண்டு! என்பது பிரஸித்தம். ஹயக்ரீவராக மாறியதற்கும், நீங்கள் கேட்டவண்ணம் காரணங்கள் மூன்று உள்ளன. அவைகளைக் கூறுகிறேன்" எனக்கூறிப் பின்வருமாறு உரைத்தார்.

ஒரு காலத்தில் லக்ஷ்மீபதியாகிய ஜனார்த்தனர் கொடிய அஸுரர் குழாத்துடன் பல்லாயிரமாண்டு கடும் சமர்புரிந்து, அவர்களை வென்றார். போர்புரிந்த களைப்புத் தாங்காமல் ஸமரபூமியிலேயே பத்மாஸனமிட்டு அமர்ந்து,

கைப்பிடித்த வில்லின் ஓர் நுனியைத் தரையில் ஊன்றி, அதன் மறுபக்கம் சிரம் சாய்த்துத் தெய்வச் செயலாக அயர்ந்து, யோகநித்திரையிலமர்ந்தார்.

அதேசமயம் தேவர்கள் ஒரு வேள்வியை நீண்டகாலமாக நடத்த எண்ணி பிரம்மா, சிவன், இந்திரன் முதலானோருடன் வைகுண்டத்தை அடைந்தனர். வைகுண்டவாஸனை அவ்விடத்தே காணப்பெறாமல், ஞான திருஷ்டியால் யக்ஞரக்ஷகர் யோக நித்திரையிலாழ்ந்திருப்பதை யறிந்து, அங்கு விரைந்தனர். கடுந்துயிலில் ஆழ்ந்திருந்த கார்முகில் வண்ணனைக் கண்டனர். தேவராஜன், தேவ காரிய நிமித்தம் திருமாலை எப்படியாவது துயிலெழும்படி செய்ய நினைத்தான். 'தூக்கத்தைக் கலைத்தல் பெருந்தவறு' என முக்கண்ணன் மொழிந்தார். நான்முகனோ, ஒரு வண்டைப்படைத்து, வில்லிற்பூட்டியுள்ள நாண் கயிற்றை அறுக்கும்படி செய்தால், வில் அசைந்து நிமிர்ந்து விடும். திருமாலும் துயில் நீங்குவார் எனக்கருதினார். இவர் எண்ணத்தை தேவர்களும் அங்கீகரிக்க, பிரம்மா ஓர் வண்டைப் படைத்து வில்லின் நாணைக் கடிக்க ஏவினார். அரிய அறிவுபெற்ற அவ்வண்டு, "பிரம்ம தேவரே, தம் எண்ணப்படியே செய்கிறேன். ஆனால் நித்திரைக்கு பங்கம் விளைவிப்பது பாபமன்றோ!

निद्राभङ्गः कथाच्छेदः दम्पत्योः प्रीतिभेदनम् ।
शिशुमातृवियोगश्च ब्रह्महत्यासमं स्मृतम् ॥

நித்ராபங்க: கதாச்சேத: தம்பத்யோ: ப்ரீதி பேதனம்
ஶிஶுமாத்ருவியோகஶ்ச ப்ரம்மஹத்யாஸமம் ஸ்ம்ருதம்

"தூக்கத்தைக் கலைத்தல், புண்ணிய கதைகளைக் கேட்க விடாமல் (பாதியில்) தடை செய்தல், அன்புள்ள தம்பதிகளைக் கோள்சொல்லிக் கலைத்தல், பால்மாறுப் பச்சிளங் குழவியையும், தாயையும் பிரித்தல், இந்நான்கும் பிரம்மஹத்தி செய்த பாவத்திற்குச் சமமென நீதி நூல் வாக்கியமல்லவா? அவ்விதமிருக்க, தேவ தேவனின் ஆனந்த நித்திரையை எவ்விதம் கலைப்பேன்? தன்னலங்கருதி பாதகம் புரிதல் உலக இயல்பாயினும், இதில் ஏனோ என் மனம் துணியவில்லை" என உரைத்தது.

நான்முகன், "அரிய வண்டே, இதுவோ தேவகாரியம், தடை சொல்லாதே. மேலும் உலக நன்மைக்காக நடைபெறும் வேள்வியில் உனக்கும் பங்குண்டு. அக்னியில் ஆஹூதி செய்யப்படும் பொருளில் சிதறி விழுந்தவை உனக்கே உரியவையாகுக" எனச்சொல்லி வற்புறுத்தவே, வண்டும் துணிந்து, நாணின் ஓர் நுனியைக் கடிக்க, நாண் கயிறு அறுபட்டு வில் நிமிர்ந்தது.

அடுத்த விநாடியில் பிரளயகாலத்திய மேககர்ஜனை போன்று பயங்கர ஓசை உண்டாகித் தேவர்களை நடுங்கச் செய்தது. பிரம்மாண்டமே கலகலத்தது; பயங்கர பூகம்பம் உண்டாகியது. ஸமுத்திரங்கள் கொந்தளித்தன. நீர் வாழும் பிராணிகள் பயந்து நடுங்கின. கோரமான புயற் காற்று எங்கும் வீசியது. மலைகள் அசைந்து ஆடின. சொல்லொணாத்துயரத்தின் அறிகுறி நிகழவிருப்பதை அறிவிப்பது போன்று, வானிலிருந்து பயங்கரக் கொள்ளிகள் வீழ்ந்தன. திக்குகளெல்லாம் மிகவும் கோரமாய்க் காட்சியளித்தன. அகாலத்தில் பகலவன் அஸ்தமனமடைந்தான். இவ்வித பயங்கர ஸம்பவங்களைப் பார்த்த தேவர்கள் செய்வகையறியாது திக்பிரமை பிடித்தவர்களாய்த் திகைத்து நின்றனர். கொடிய இருள் சூழ்ந்திருந்த அந்நிலையில் மேலும் பயங்கரமான காக்ஷியைக் கண்டனர்.

சொன்னால் வாய் கூசும். எழுதினால் கரம் நடுங்கும். அச்சம்பவத்தைக் கண்டு, பரமசாந்தர்களான பிரம்ம ருத்திரர்களும் கதி கலங்கினர். யாது நேருமோ எனத் தவித்து நிற்கும் தேவர்கள், லோகரக்ஷகன், தேவதேவன் ஸ்ரீ விஷ்ணு பகவானுடைய சிரசு, கிரீட குண்டலங்கள் ஒளி வீச, உடலினின்றும் பிரிந்து, வான வீதியிற் சென்று எங்கோ மறைந்ததையும், தலையற்ற உடல் மாத்திரம் பூமியில் அவலக்ஷணமாய் இருப்பதையும் பார்த்து மெய் நடுக்கங்கொண்டனர். பதறித் தவித்தனர். த[illegible]ல் மூழ்கி வாய்விட்டுக் கதறத் தொடங்கினர்.

"ஹே! தேவதேவனே! பிரபுவே! எந்நாளும் அழிவற்ற எங்கள் இறைவனே! மிக்க அதிசயமாக

[illegible] நூலக

நேர்ந்த இச்சம்பவம் உண்மைதானா? அல்லது நாங்கள் காண்பது கனவோ? தாங்களில்லையேல் நாங்களேது? தேவர்களுக்கெல்லாம் அழிவுகாலம் ஏற்பட்டுவிட்டதா? யாருடைய மாய பலத்தால் தங்கள் சிரசு மறைந்தது என்பது விளங்கவில்லையே! என்றும் எக்காலத்திலும் எவராலும், ஆயுதங்கொண்டு வெட்டவோ, பிளக்கவோ, நெருப்பினால் எரிக்கவோ முடியாத தங்கள் திருமேனிக்கு இந்தக் கதி நேரலாமா? உங்கள் கதி இவ்விதமானபின் நாங்கள் இனி வாழ்வதேது? எங்கள் சுயநலத்தாலல்லவோ தங்களுக்கு இக்கதி நேர்ந்தது? உங்களிடம் நாங்கள் வைத்த அன்பின் ஆழம் இவ்வளவுதானா? சுயநலம் பிடித்த நாங்கள் இனி அழுதென்னபயன்? நாங்கள் செய்ய நினைத்த வேள்விக்கு இடையூறு, யக்ஷர்களாலோ, அஸுரர்களாலோ, ராக்ஷஸர்களாலோ நேர்ந்திருந்தாலாவது பொருத்தமாயிருக்கும். தேவர்களே இதற்குப் பொறுப்பாளிகளாகும் பொழுது யாரை நோவது? ஹே லக்ஷ்மீபதியே! உம்மையே சரணடைந்து, உமக்கே அடிமையாகி, ஸ்வதந்திரமிழந்த நாங்கள் இனி எங்கு செல்வோம். யாரைச் சரணமடைவோம். அசட்டுத்தனமாய் நடந்து கொண்ட எங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லையே? மாயையை வென்ற ஜகத்குருவான தங்களுக்கு இவ்விதம் நேர, மாயைதான் காரணமென்றால் நம்பமுடியவில்லையே?"

இப்படிப் பலவிதமாகப் புலம்பித்தவிக்கும் தேவர் கூட்டத்தைப் பார்த்து, ஸகல வேதங்களையும் ஓதியுணர்ந்த குருபகவான் "ஹே தேவர்களே! இனி அழுதோ, கதறியோ என்ன பயன்? நடக்கக்கூடாதது நடந்து விட்டது, உண்மைதான். ஆனாலும் எந்த உபாயத்தினால் மறுபடி மஹாவிஷ்ணுவைத் தலையுடன் எழச் செய்யலாம் என்பதை ஆலோசித்து அதற்காவன செய்யவேண்டுமே தவிர, துக்கித்து நிற்றல் புத்திசாலித்தனம் அன்று. முயற்சியால் எதையும் ஸாதிக்கலாம். தெய்வத்திருவருளும் சேர்ந்தால் எவையும் கைகூடும்" எனச் சமாதானம் செய்தார்.

(தொடரும்)

உ

ஸூர்தாஸரின் பக்தியோகம்

T. S. சிவராமலிங்கம், B Sc.

வடதேசத்து வைஷ்ணவ பக்தர்களுள் தலை சிறந்தவர் ஸூர்தாஸ். இவர் ஜாதியில் ஸாரஸ்வதப் பிராம்மணர். இவரைச் சிலர் பிறவிக்குருடர் என்று கருதுகிறார்கள். பிரம்மத்தின் விகாஸத்தை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாகக் கண் குளிரப் பார்த்தவர் இவர். அந்த மூர்த்தியின் லீலா விநோதங்களை மிகவும் அழகாக, புராதன ஹிந்தியாகிய வ்ரஜ பாஷையில் (ब्रजभाषा) கீர்த்தனை ரூபமாக இவர் எழுதியுள்ளார். அன்னாரின் பத்யங்களில் ('தோஹே दोहे' என்று சொல்வதுண்டு) உயர்ந்த தத்வங்களை நாம் காணலாம். ஸூர ஸூக்தி ஸுதா (सूरसूक्तिसुधा) என்ற இணையற்ற ஒரு காவ்யத்தை இவர் செய்துள்ளார். இதிலிருந்து முக்கியமான சில கருத்துக்களையும் அதன்மூலம் இவருடைய பக்தியோகத்தையும் காட்டுவோம்.

இவர் தம் கவிதையின் ஆரம்பத்தில் 'மங்களாசரணம்' என்ற தலைப்பில் ஸ்ரீ கிருஷ்ணனைத் துதிக்கிறார்.

"... ... ... चरन-कमल बंदौं हरि राई ।
जाकी कृपा पंगु गिरि लंघै, अंधे कों सब कहु दरसाई ॥
बहिरौ सुनै, मूक पुनि बोलै, रंक चलै सिर छत्र धराई ।
सूरदास स्वामी करुनामय, बार, बार बंदौ तेहि पाई ॥"

"ஸ்ரீ கிருஷ்ணனின் கருணை எப்படிப்பட்டது என்றால் நொண்டியை நடக்கவைக்கும்; அவனை மலையைத் தாண்டச்செய்யும்; குருடனுக்குக் கண் கொடுக்கும்; செவிடனுக்குக் கேட்கச் சக்தி கொடுக்கும்; ஊமையைப் பேசவைக்கும்" என்கிறார்.

இதே கருத்தை அடியிற் கண்ட சுலோகத்திலும், ஸ்ரீ துளஸீதாஸ் எழுதின दोहे யிலும் காணலாம்,

"मूकं करोति वाचालं, पंगुं लंघयते गिरिम् ।
यत्कृपा तमहं वन्दे परमानन्दमाधवम् ॥"

"मूक होई वाचाल, पंगु चढ़ै गिरिवर गहन ।
जासु कृपा सुदयाल द्रवौ सकल कलिमल-दहन ॥"

ஸம்ஸாரத்தைச் சமுத்திரத்திற்கு ஒப்பிட்டு அதன் வரலாற்றை மிகவும் அழகாக இவர் வர்ணிக்கிறார் :—

"नीर अति गंभीर माया, लोभ लहरि तरंग ।
मीन इन्द्रिय अति हि काटति ... ...
काम क्रोध समेत तृष्णा, पवन अति झक-झोर ।
नाहिं चितवन देत तिय सुत नाम-नौका ओर ॥"

"மாயை என்பது ஸம்ஸாரத்தின் மிக ஆழமான ஜலம். ஆசை என்பது அதன் அலைகள். வாஸனை அல்லது விருப்பங்கள் அதில் உள்ள முதலை. இந்திரியங்கள் மீன்கள். மனிதன் தன் தலையில் பாப மூட்டையைச் சுமந்துகொண்டு இந்தச் சாகரத்தைத் தாண்ட முயல்கிறான். அதோடு அவனை மோகம் என்கிற பாசி கீழே இழுக்கிறது. காமக் குரோதங்கள் என்கிற காற்று அவனை முன்னேறாதபடி தள்ளிவிடுகிறது. இப்படிப்பட்ட கஷ்ட நிலைமையில் ஸ்ரீ கிருஷ்ணனின் நாமமாகிய படகு அவனைக் கரை சேர்த்துவிடுகிறது". எவ்வளவு ஆழ்ந்த கருத்து!

ஸூர்தாஸ் தம்மை எல்லோரிலும் கடையனாக ஓர் இடத்தில் சொல்கிறார் :—"நான் புண்யம் செய்யவில்லை, ஆகையால் எனக்கு, நரகம் தான் கிடைக்கும். நரகமும் என்னை ஏற்றுக்கொள்ளாது. ஏனென்றால் என் பாபம் மிகப் பெரியது. பாபம் செய்ததால் எனக்கு ஸ்வர்க்கத்திற்கும் அனுமதி இல்லை. ஆகையால் அடைக்கலம்புகும் இடம் ஸ்ரீ ஹரியின் சரணகமலம்தான்" என்கிறார். அதோடு மிகவும் பாபியாகிய அஜாமிளன் சாகும் போது 'நாராயணா' என்று தன் மகனின் பெயரைச் சொல்லிக்கூப்பிட்டதால் அவனுக்கு ஸ்வர்க்கம் கிடைத்தது என்ற கதையையும் காட்டுகிறார்.

"बडे पतित पासंगहुँ नाहीं, अजमिल कौन बिचारे ।
पतित कौं ठौर कहूँ नहिं, है हरि नाम सहारो ॥"

ஸ்ரீ ஹரியின் கருணையைப்பற்றிக் கூறுமிடத்து, "மனிதன் எவ்வளவு தப்புச்செய்தாலும் நேர்மையான பாதையிலிருந்து நழுவிப்போனாலும் ஸ்ரீ ஹரி அவனை மன்னித்து ஆட்கொள்கிறார்" என்கிறார். அதற்கு உபமானமும் கூறுகிறார் :—"பூமியைப் கலப்பையால் உழுகிறோம். இதனால் அதனைத் துன்புறுத்துகிறோம். ஆனால் பூமி அதற்குப் பதிலாகத் தானியங்களை மனிதனுக்குக் கொடுக்கிறது. மலயகிரி, தன்மேல் கோடரியால் அடிப்பவனுக்கும் குளிர்ந்த காற்றைக்கொடுக்கிறது. தாயார் தன் பிள்ளை எவ்வளவு பிசகு செய்தாலும் அவனை மன்னித்து விடுகிறாள்" இக்கருத்து கீழே காணும் "दोहे"யில் காணப்படுகிறது

"जैसें जननि-जठर-अन्तरगत, सुत अपराध करै
जद्यपि मलय वृच्छ जड काटै, कर कुठार पकरै ।
तऊ सुभाव सुगन्ध सुशीतल, रिपु-तन-ताप हरै
धर बिधंसि नल करत किरसि हलबारि बीज बिथरै ॥"

"ஈச்வரன் பால் அன்பு செலுத்துபவனை எவன் அநாவசியமாகத் துன்புறுத்துகிறானோ அவனை ஈச்வரன் தண்டிக்கிறார். இதற்குச் சான்றுகள் அம்பரீஷன், பிரஹ்லாதன் இவர்களின் கதைகள். அம்பரீஷனைத் துன்புறுத்திய துர்வாஸ முனிவரை மஹா விஷ்ணுவின் சக்கரம் துரத்தியது. பிரஹ்லாதனின் வார்த்தையை நிலை நிறுத்தப் பகவான் நரஸிம்மரூபமாகத் தூணில் தோன்றி துன்புறுத்திய ஹிரண்யனைக்கொன்றார்" இதைக் கீழ்க் கண்ட "दोहे"யில் கூறுகிறார்.

महाप्रसाद भयौ अँबरीष कों, दुरबासा कौ क्रोधनिवार्यौ ।
कृपा करी प्रहलाद भक्त पै खम्भ भारि हिरनाकुस मार्यौ ॥
नरहरि-रूप धर्यौ करनाकर छिनक माहिं उर नखनि बिदार्यौ ॥
இந்தக் கருத்துத்தான் கீதையில் ஒலிக்கிறது.

" परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् "

ஈச்வரனால் ஆக்கப்பட்ட ப்ரக்ருதி (**प्रकृति**) ரூபமாகிய மாயையை வெல்வது கடினம்: **मम माया दुरत्यया**" (கீதை).

" माया-नटिनि लकुटि कर लीनें कोटिक नाच नचावै "

"எப்படி நட்டுவனார் குச்சியால் கீழேதட்டி, தாளத்தோடு ஒன்றுசேர்த்துச் சிஷ்யனை அல்லது சிஷ்யையை ஆட்டிவைக்கிறானோ, அதேபோல் மாயை தன் இசைக்கு ஒத்து மனிதனை ஆட்டி வைக்கிறது" என்கிறார்.

இந்த "அவித்யா" (ignorance) அவஸ்தையில் (State) ஈசுவரனின் சரணம்தான் கதி. அவர்தான் தலைவன்; அவர்தான் அணிகலம்."

" मेरे तो तुमहीं पति, तुम गति ॥ "

" गतिर्भर्ता प्रभुः साक्षी निवासः शरणं सुहृत् ।"(கீதை 9-18)

वात्सल्य என்ற தலைப்பில் ஸூர்தாஸ் ஸ்ரீ கிருஷ்ணனின் பால்ய லீலைகளை வெகு அழகாகத் தீட்டியிருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணனின் ரூபத்தை வர்ணிக்கும்பொழுது:

" कुलहि लसति सिर स्याम सुभग अति बहुविधि सुरंग बनाई ।"

" ஸ்ரீ கிருஷ்ணனின் தலையை அநேக நிறமுள்ள துணியால் செய்யப்பட்ட தொப்பி அலங்கரிக்கிறது. இது ஸ்ரீ கிருஷ்ணனின் கறுப்பு நிறத்திற்கு வான வில்போல் உள்ளது" என்கிறார்.

" अति सुदेस मृदु चिकुर हरत मन मोहन मुख बगराई ।"

மேலும் கூறும்பொழுது, " ஸ்ரீ கிருஷ்ணனின் முகம் தாமரைமலர்போல் இருக்கிறது. கறுப்பு மயிர்கள் சில அந்த முகத்தின்மேல் தொங்கிக்கொண்டு இங்கும் அங்கும் ஆடுகின்றன. இது வண்டுகள் மேலே பறக்கும் தோற்றத்தைக் கொடுக்கிறது" என்கிறார்.

(தொடரும்)

வாஸிஷ்டஸாரம்

(நா. நடராஜன்)

(முன் தொடர்ச்சி)

முக்தியென்பது ஸச்சிதானந்த பரமாத்ம ஸ்வரூபம். ஜீவன் எப்பொழுதும் பரமாத்ம ஸ்வரூபமாகவேதானிருக்கிறான். ஆகையால் முக்தி நிலை புதிதாக ஏற்படுவதில்லை. பந்தமென்பதும் வாஸ்தவத்தில் கிடையாது. தன் உண்மை ஸ்வரூபத்தை அறியாததால் பந்தமிருப்பதாகவும், பின்னால் பந்தம் நீங்கி முக்தி ஏற்படுவதாகவும் ப்ராந்தியால் நினைக்கிறான். கயிற்றில் பாம்பு வந்ததும், அது நீங்கினதும் வாஸ்தவமில்லையல்லவா. பொய்யாயிருந்தாலும் பந்தம் நீங்க முயற்சிக்கவேண்டும். வேதாந்த விசாரம் செய்து ஆத்மஞானம் ஸம்பாதித்தால் அக்ஞானம் விலகி கர்மாக்களும் நீங்கி, ஸம்ஸார பந்தமும் தொலைந்து தன் ஸ்வரூப ஆனந்தத்தை நன்றாக அநுபவிப்பான்.

இந்த ஆத்மஞானம் ஏற்படத் தடையாயிருப்பது மனம் தான். மோக்ஷத்திற்கும் காரணம் அதுதான். ஆகவே மனத்தை மனதாலேயே வெல்லவேண்டும். மனமென்பது ஸங்கல்ப வடிவமானது; வாஸனாமயமானது. மனதின் செயல்களே கர்மங்கள். மனம்தான் ப்ரஹ்மத்தில் தனது ஸங்கல்பத்தால் ஸுகதுக்க ரூபமான பிரபஞ்சத்தைக் கல்பிக்கிறது. அக்ஞானிகள் இதை உண்மையென நினைக்கிறார்கள். விசாரணை செய்து ப்ரஹ்மத்தைத் தெரிந்து கொண்டால் பிறகு மனம் அந்த ப்ரஹ்மத்திலேயே மறைந்துவிடும். லோகவாஸனை நிரம்பிய அசுத்த மனம் தான் பந்தத்திற்குக் காரணம். ஸம்ஸாரக் கடலைக் கடந்து முக்தி என்ற அக்கரைசேர மனோநிக்ரஹம்தான் மரக்கலமாக உதவுகிறது. இம்மனமானது முதலில் அனாத்மாவில் ஆத்ம புத்தியை உண்டுபண்ணுகிறது. இதற்கு அஹங்காரம் என்று பெயர். நிர்விகாரமான ஆத்மாவில் அனாத்ம தர்மங்களை ஆரோபணம் செய்கிறது. இவ்வாறு ஆத்மாவை

மஹாத்மாவை நெருங்கி "ஸ்வாமி, நான் இந்தச் சாதனையில் மேன்மேலும் முன்னேற வழிகாட்ட வேண்டும்" என்று வேண்டினார். பிறர் மனத்தில் உள்ளதை அறியும் சக்தி, தமக்கு இந்த மானஸ பூஜையினால் கிடைத்ததாக அந்த மஹாத்மா பிராம்மணரிடம் சொன்னார். அந்த மஹாத்மாவிடமிருந்து மானஸ பூஜை ஸம்பந்தமான சில உபதேசங்களைப் பெற்று அந்தப் பிராம்மணர் அப்படியே நடந்து தம் இஷ்ட தேவதையின் ஸாக்ஷாத்காரத்தையும் அதனால் திவ்ய ஞானத்தையும் பிறகு மோக்ஷத்தையும் அடைந்தார்.

எனவே சுலபமாகவும் வெகு விரைவிலும் தத்வ ஞானம் பெற மானஸிக பூஜையைப்போன்ற சிறந்த ஸாதனம் வேறொன்றும் இல்லை என்று குருநாதர் இவரிடம் சொன்னார்கள்.

மறுநாள் பிரதோஷம். ஆனால் பிரதோஷம் என்பது இவருக்குத் தெரியாது. அன்று மத்தியானத்திற்குமேல் துங்கபத்ரா நதியில் ஸ்நானம் செய்துவிட்டுப் பிறகு தனியாகவே கால்போன போக்கில் ஒரு லட்சியமும் இல்லாமல் நடந்து சென்ற இவர், எங்கெல்லாமோ சுற்றிக்கொண்டு பக்கத்துக் குன்றின்மேல் இருந்த காலபைரவர் கோயிலை அடைந்தார். அங்கே போக வேண்டும் என்று இவர் நினைக்கவே இல்லை. கோயில் பூட்டியிருந்தது. என்ன காரணத்தாலோ கோயில் பூட்டுத் திறந்திருக்கிறதா என்று இழுத்துப் பார்த்தார் இவர். அது சரியாகப் பூட்டப்படாமல் இருந்ததால் இழுத்தவுடனே திறந்துகொண்டது. கதவைத் திறந்து உள்ளே சென்ற இவர் பலமுறை காலபைரவரை நமஸ்கரித்தபிறகு ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டார். பிறகு சிவபெருமானையும் குருநாதரையும் தியானிப்பதில் ஈடுபட்ட இவர் குருநாதரின் துணையோடு மானஸ பூஜையைத் தொடங்கினதும் தம்மையே மறந்துவிட்டார். குருநாதர் சிவபூஜை செய்ய இவர் வேண்டிய சுச்ரூஷைகளைச் செய்துகொண்டிருந்தார். எல்லாம் மானஸ கல்பனையே. உலகத்தில் எங்கும் கிடைக்காத – மடத்தில் கூடக் காணமுடியாத – மிகச் சிறந்த பூஜாத் திரவியங்களைக்

கொண்டு வந்து கொண்டுவந்து இவர் குருநாதரிடம் கொடுத்தவண்ணம் இருந்தார். பிறகு குருநாதரின் கட்டளைப்படி இவரே சிவபூஜை செய்தார். இவர் நெஞ்சில் விவரிக்க முடியாத இன்பம் நிறைந்திருந்தது. இந்த அநுபவத்தில் மூழ்கியிருந்த இவர் அதைவிட்டு விடுபட விரும்பவில்லை. இவர் தம் பிரக்ஞை முழுவதையும் இழந்து விடவுமில்லை. இரவு மடத்தில் நடந்த சாரதாம்பாள் பூஜையின் போதும், ஹாரத்தியின் போதும் வாசித்த நாகச்வர இசை இவர் காதில் லேசாக விழுந்தது. ஆனாலும் இவர் சிவபெருமானையும் குருநாதரையும் தியானித்தபடியே இன்பாநுபவத்தில் மூழ்கியிருந்தார்.

இவர் இந்த நிலையிலிருந்து மாறி தியானம் கலைந்து விழித்தபோது இரவு மணி பதினொன்று. தாம் தியானத்தில் அமர்ந்து இவ்வளவு நேரம் ஆகிவிட்டது என்பது இவருக்குத் தெரியவே இல்லை. நெஞ்சில் பேரின்பப் பெருக்கு இருந்தது. ஓர் புத்துணர்வு இவர் நெஞ்சையெல்லாம் வியாபித்துக் கொண்டிருந்தது. ஒரு சாந்தி இருந்தது. அப்பொழுது ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. அதன் ஒளியால் இவர் அங்கிருந்து புறப்பட்டுத் தமது இருப்பிடமடைந்தார்.

காலம், இடம் என்ற எல்லைகளை எல்லாம் மீறி இவர் எட்டுமணி நேரம் தியானநிலையில் (மாநஸ பூஜை) இருந்திருக்கிறார். இதுவே ஸவிகல்ப ஸமாதியின் ஆரம்ப நிலை என்பது இவருக்குப் பின்னால் தெரியவந்தது. இந்த அநுபவம் எடுத்துச் சொல்லமுடியாத ஒரு தனி அநுபவம். இதற்குப் பிறகு இவர் பலமுறை எப்படியெல்லாமோ முயன்றும் இந்த அநுபவத்தைக் கொஞ்ச நேரங்கூடப் பெற முடியவில்லை. (எட்டுமணி நேரம் பெறுவது இருக்கட்டும்.)

மறுநாள் குருநாதர் ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜை செய்யும்போதே இவர் மடத்துக்குப் போய்விட்டார். பூஜை முடிந்து குருநாதரின் திருக்கரத்தால் தீர்த்தம் பெற்றுக்கொள்ளும்போது குருநாதர் இவரைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். அதில் ஏதோ அர்த்தம் இருப்பதாக

இவருக்குப்பட்டது. ஆனால் குருநாதர் அப்போது இவரோடு பேசவில்லை. அன்று மாலை 4 மணிக்குக் குருநாதர் ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ம பாரதீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்துக்கு வந்தார்கள். பத்துப் பன்னிரண்டு பக்தர்களோடு இவரும் அங்கே குருநாதரின் தரிசனத்துக்காகக் காத்திருந்தார். அவர் வந்தவுடனே எல்லோரும் அவர் திருவடிகளில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். தம் கையால் சைகை செய்து இவரைமட்டும் தனியே நிற்கச்சொன்ன குருநாதர் மற்றவர்களை ஒவ்வொருவராக அழைத்துப் பேசி ஆசீர்வாதம்செய்து பிரஸாதம் வழங்கி அனுப்பிவிட்டார்கள். இதற்குச் சுமார் அரைமணிநேரம் ஆயிற்று. எல்லோரும் விடைபெற்றுச் சென்றபிறகு இவரைத் தம் அருகே வரும்படி குருநாதர் அழைத்தார்கள். அவர்கள் பக்கத்தில் சென்ற இவர் கீழே விழுந்து நமஸ்கரித்துவிட்டுச் சற்றுத் தூரத்தில் அடக்கமாக உட்கார்ந்தார். "நேற்று நீ என்னப்பா செய்தாய்" என்ற கேள்வி குருநாதரிடமிருந்து எழுந்தது. [இந்தக் கேள்வியை நினைக்கும்போது இவருக்கு இன்றும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அக்ரூரரைக் கேட்டதாகப் பாகவதத்தில் வரும் கேள்வி நினைவுக்கு வருகிறது.

.... किं ते दृष्टमिवाद्भुतम् ।
भूमौ वियति तोये वा तथा त्वं लक्षयामहे ॥ (१०-४१-३)

[பூமியிலும் ஆகாசத்திலும், நீரிலும் என்ன அற்புதக் காட்சிகளைக் கண்டாய்? ஏதோ மறைத்தான அற்புதக் காட்சிகளைக் கண்டவன்போல உன் முகம் விளங்குகிறதே?].

முதலில் இவர் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. இவர் மனதில் பயத்தால் ஏற்பட்ட ஒரு நடுக்கம் இருந்தது. பைரவர் கோயில் பூட்டை அநுமதியில்லாமல் தாம் திறந்த குற்றம் இவர் நெஞ்சை உறுத்தியது. குருநாதர் புன் சிரிப்பாலும் அன்பு நிறைந்த சொற்களாலும் இவருக்குத் தைரியம் ஊட்டியதனால் பயத்துடனேயே தட்டுத் தடுமாறி இவர் முதல்நாள் தாம் பூட்டைத் திறந்ததை விண்ணப்பித்துக்கொண்டார். "எனக்கு இது தெரியும். வேண்டுமென்றேதான் பூட்டு அந்த நிலையில் வைக்கப்பட்டது" என்றார்கள் குருநாதர். இதனால், இன்னும் சற்றுத் தைரியம் பெற்ற இவர் தாம் பெற்ற அநுபவம் முழுவதையும் எடுத்துச் சொன்னார். இதைக் கேட்டுவந்த குருநாதர் கண்களில் அநுக்கிரஹம் நிறைந்து வழிந்தது.

பிறகு குருநாதரின் ஏவலாளர் ஒருவரிடமிருந்து பின் கண்ட விஷயம் இவருக்குத் தெரியவந்தது. பூட்டு கெட்டுப் போயிருந்தது. அடிக்கடி அது சரியாகப் பூட்டிக்கொள்வதில்லை. எனவே இரண்டு நாளைக்கு முன் ஒரு புதிய பூட்டு வாங்கி வைத்திருந்தார்கள். முதல் நாள் குருநாதர் தம் ஏவலாளரோடு பைரவர் கோயிலுக்குப் போயிருந்தபோது, ஏவலாளர் பழைய பூட்டை வைத்துவிட்டு புதுப்பூட்டை மாட்டப்போனார். அப்போது குருநாதர் ஏவலாளரைப் பார்த்து "பழைய பூட்டே இருக்கட்டும். பின்னால் மாற்றிக்கொள்ளலாம்" என்று சொன்னார்களாம். என்ன ஆச்சரியம்! இவருக்கு இந்த அநுபவம் கொடுப்பதற்காகவே குருநாதர் முன்னேற்பாடு செய்திருக்கிறார் போலும்.

பைரவர்கோயில் அநுபவத்திற்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் இவரை நோக்கி, 'நீ உன் லௌகிக விவகாரங்களை எல்லாம் ஒழுங்குபடுத்திவிட்டுச் சிருங்ககிரிக்கு வந்து தங்கிவிடேன்' என்று சொன்னார்கள்.

இவர் ஊருக்குச்சென்று தம் விருப்பத்தைக் குடும்பத்தாருக்குத் தெரிவித்தார். எல்லோருமாக யோசனை செய்து தம் இஷ்டப்படியே செய்ய இவருக்கு அனுமதி கொடுத்துவிட்டார்கள். உடனே இவர் தாம் ஸர்வகலாசாலையில் வகித்த வேலையை ராஜிநாமாச் செய்து விட்டுச் சிருங்ககிரிக்குச் சென்றார். அங்கே பிரம்மசாரி வாழ்க்கை வாழத் தொடங்கினார். ஊருக்குள்ளே வீடு வீடாகச் சென்று பிக்ஷை எடுத்துத்தான் இவர் உண்பார். (மடத்தில் இவருக்கு உணவு கிடைக்கும்; ஆனாலும் இவர் இப்படி பிக்ஷை எடுப்பதையே விரும்பினார்) மஹா ஸ்வாமிகள் தனிப்பட்ட முறையில் இவருக்கு விவேகசூடாமணியைப் பாடம் சொல்லி

வந்தார். இந்தக்கருணைக்குப்பாத்திரமாகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது பூர்வ ஜன்ம புண்ய பலனாகத்தான் இருக்கவேண்டும். இது ஒப்புயர்வில்லாத பாக்கியம். ஆறு மாதகாலம் வரையில் பாடம் சொன்ன ஸ்வாமிகள் 225 சுலோகங்களைச்சொல்லி முடித்தார்கள். பிறகு இவர் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ள வெளியூருக்குச் செல்ல நேர்ந்ததால் இந்தப் பாடத்தை நிறுத்தவேண்டி நேர்ந்து விட்டது. பிறகு ஒரு முறை இவர் இந்தப்பாடத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வேண்டியபோது ஸ்வாமிகள் 'படித்த அளவு போதும்' என்று சொல்லி விட்டார்கள்.

1943–சித்திரை மாதத்தில் இவர் மூன்று நாட்களைத் தனியாக நரஸிம்ம பர்வதத்தில் கழிக்க நேர்ந்தது. பக்கத்திலிருந்த குளத்தில் தண்ணீர் குடிக்க இரவில் ஒரு கொடிய மிருகம் வந்தது. இவர் உரக்கக்கத்திக்கொண்டே ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்து ஆட்டினர். (பாதுகாவலாக இவர் நெருப்பு மூட்டியிருந்தார்.) பயத்தால் இவர் நடுங்கிக்கொண்டிருந்தார். 'ஸத்குரோ! காப்பாற்ற வேண்டும்' என்று இவர் உரக்கக் கூச்சலிட்டார். அதிர்ஷ்ட வசமாக அந்த மிருகம் ஓடிவிட்டது. அன்று இரவு முழுவதையும் இவர் குரு ஸ்தோத்திரங்களைச் சொல்லியபடியே கழித்தார்.

அந்த வருஷம் மே மாதம் மஹா ஸ்வாமிகள் இவரைக் கூப்பிட்டு, "நீ இப்போது ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய தகுதி இருப்பதாக நினைக்கிறோம். நெலமாவு மடத்தின் தலைமை ஸ்தானம் இப்போது காலியாக இருக்கிறது. அந்த ஸ்தானத்தை வகிப்பதற்காக ஒருவர் இங்கே ஸந்நியாஸம் பெறப் போகிறார். அவரோடுகூட நீயும் ஸந்யாஸம் பெறலாம்" என்றார்கள்.

(தொடரும்)

॥ पञ्चदशी ॥

२. पञ्चभूतविवेकप्रकरणम् ॥

பஞ்சதசீ

2. பஞ்சபூத விவேக ப்ரகரணம்

सदद्वैतं श्रुतं यत्तत्पञ्चभूतविवेकतः ।
बोद्धुं शक्यं ततो भूतपञ्चकं प्रविविच्यते ॥ १ ॥

ஸதத்வைதம் ஸ்ருதம் யத்தத் பஞ்சபூத விவேகத:
போத்தும் ஸக்யம் ததோ பூத பஞ்சகம் ப்ரவிவிச்யதே.

ஆத்மவஸ்து ஸத்ரூபம் (எப்பொழுதும் நிலைத்திருப்பது) அத்விதீயம் (வேறு பொருளற்றது) என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. அவ்விஷயம் பஞ்சபூதங்களின் விவேகத்தால் தெளிவாகிறபடியால் பூதங்களைப்பிரித்து உரைக்கிறோம். (1)

शब्दस्पर्शौ रूपरसौ गन्धो भूतगुणा इमे ।
एकद्वित्रिचतुःपञ्चगुणा व्योमादिषु क्रमात् ॥ २ ॥

ஸப்தஸ்பர்ஸௌ ரூபரஸௌ கந்தோ பூதகுணா இமே
ஏகத்வித்ரிசதுःபஞ்சகுணா வ்யோமாதிஷு க்ரமாத்.

சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்து குணங்கள் முறையே ஆகாயம், வாயு, தேஜஸ், ஜலம், பூமி என்ற ஐந்து பூதங்களின் குணங்கள். ஒவ்வொன்றிற்கும் சிறப்புக்குணம், பொதுகுணம் என்ற முறையில் ஆகாயம் முதல் ஒவ்வொன்றிலும் முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து குணங்களுண்டு. (2)

प्रतिध्वनिर्वियच्छब्दो वायौ वीसीति शब्दनम् ।
अनुष्णाशीतसंस्पर्शः वह्नौ भुगुभुगुध्वनिः ॥ ३ ॥

उष्णस्पर्शः प्रभारूपं जले बुलुबुलुध्वनिः ।
शीतस्पर्शः शुक्लरूपं रसो माधुर्यमीरितः ॥ ४ ॥

भूमौ कडकडाशब्दः काठिन्यं स्पर्श इष्यते ।
नीलादिकं चित्ररूपं मधुराम्लादिको रसः ॥ ५ ॥
सुरभीतरगन्धौ द्वौ गुणाः सम्यग्विवेचिताः ।

ப்ரதித்வநி: வியச்சப்தோ வாயௌ பீஸீதி சப்தநம்
அனுஷ்ணாசீதஸம்ஸ்பர்சோ வஹ்நௌ புகுபுகுத்வநி:
உஷ்ணஸ்பர்ச: ப்ரபாரூபம் ஜலே புலுபுலுத்வநி:
சீதஸ்பர்ச: சுக்லரூபம் ரஸோ மாதுர்யமீரித:
பூமௌ கடகடாசப்த: காடிந்யம் ஸ்பர்ச இஷ்யதே
நீலாதிகம் சித்ரரூபம் மதுராம்லாதிகோ ரஸ:
ஸௌரபேதரகந்தௌ த்வௌ குணா: ஸம்யக்விவேசிதா:

ப்ரதித்வனி ஆகாயத்தின் சிறப்புக் குணம். (ஆகாயத்திற்கு சப்தம் என்ற ஒரே குணம்தான். வேறு குணங்கள் கிடையாது). வாயுவிற்கு 'பீஸீ' என்ற சப்தம் பொது குணம். அதிக உஷ்ணமும் அதிக சீதமுமற்ற ஸ்பர்சம் வாயுவின் விசேஷ குணம். இவ்வாறு வாயுவிற்கு சப்தம் ஸ்பர்சம் என்ற இரு குணங்கள். அக்னிக்கு 'புக் புக்' என்ற சப்தமும் உஷ்ண ஸ்பர்சமும் பொது குணங்கள். பிரகாசமான ரூபம் அக்னிக்கு சிறப்பு குணம். ஆக அக்னிக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம் என்று மூன்று குணங்கள். ஜலத்தில் 'புலுபுலு' என்ற சப்தமும், குளிர்ச்சியான ஸ்பர்சமும், வெண்மை நிறமும் பொது குணங்கள். இனிப்புச் சுவை சிறப்பு. இவ்வாறு ஜலத்திற்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் என்று நான்கு குணங்கள். (அக்னியின் ஒளி மற்றப் பொருள்களை விளக்குகிறது; ஜலத்தின் ஒளி மற்றப் பொருள்களை விளக்குவதில்லை. 'भास्वरशुक्लं तेजसि, अभास्वरशुक्लं जले' என்று ந்யாய சாஸ்திரம் கூறுகிறது). பூமிக்கு 'கட கட' என்ற சப்தமும், கடின ஸ்பர்சமும், நீலம் முதலிய பல நிறங்களும், இனிப்பு புளிப்பு முதலிய சுவைகளும் பொது குணங்கள். நறுமணம், துர்க்கந்தம் இவை சிறப்பு. ஆக பூமிக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்று ஐந்து குணங்கள். இவ்வாறு குணங்கள் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. (3-6)

श्रोत्रं त्वक्चक्षुषी जिह्वा घ्राणं चेन्द्रियपञ्चकम् ॥ ६ ॥
कर्णादिगोलकस्थं तच्छब्दादिग्राहकं क्रमात् ।
सौक्ष्म्यात्कार्यानुमेयं तत्प्रायो धावेद्बहिर्मुखम् ॥ ७ ॥

ச்ரோத்ரம் த்வக்சக்ஷுஷீ ஜிஹ்வா க்ராணம் சேந்த்ரிய பஞ்சகம்
கர்ணாதிகோளகஸ்தம் தத் சப்தாதிக்ராஹகம் க்ரமாத்,
ஸௌக்ஷ்ம்யாத் கார்யாநுமேயம் தத்ப்ராயோ தாவேத் பஹிர்முகம்.

செவி, தோல், கண், நாவு, மூக்கு என்ற ஞானேந்திரியங்கள் ஐந்தும் அந்தந்த கோளகத்தில் (காது முதலிய இடங்களில்) இருந்துகொண்டு சப்தம் முதலிய விஷயங்களை அறிகின்றன. சூக்ஷ்மங்களாக இருப்பதால் அவைகளை பிரத்யக்ஷமாகப் பார்க்க இயலாது. அவைகளின் செயலால் (அனுமானத்தினால்) அறியத்தக்கவை. அவைகளும் பொதுவாக வெளிநோக்காகவே செல்கின்றன. (6-7)

(அ) அநேகமாக வெளிநோக்குள்ளவைகள் இந்திரியங்கள் என்று கூறுவதால் சில இடங்களில் அவைகளுக்கு உள்நோக்குமிருக்கிறதென்று தெரிகிறது. அதை விளக்குகிறார்:—

कदाचित्पिहिते कर्णे श्रूयते शब्द आन्तरः ।
प्राणवायौ जाठराग्नौ जलपानेऽन्नभक्षणे ॥ ८ ॥
व्यज्यन्ते ह्यान्तराः स्पर्शा मीलने चान्तरं तमः ।
उद्गारे रसगन्धौ चेत्यक्षाणामान्तरग्रहः ॥ ९ ॥

கதாசித் பிஹிதே கர்ணே ச்ரூயதே சப்த ஆந்தர:
ப்ராணவாயௌ ஜாடராக்நௌ ஜலபானே(அ)ந்நபக்ஷணே.
வ்யஜ்யந்தே ஹ்யாந்தரா: ஸ்பர்சா மீலநே சாந்தரம் தம:
உத்காரே ரஸகந்தௌ சேத்யக்ஷாணாமாந்தரக்ரஹ:

கைகளால் செவிகளைப் பொத்தும்பொழுது பிராணவாயுவிலும் ஜாடராக்னியிலும் உண்டாகிற ஓர் ஒலி உள்ளே கேட்கிறது. தண்ணீர் குடிக்கும்பொழுதும் உணவு உட்கொள்ளுகையிலும் உள்ளே ஓர் ஸ்பர்ச உணர்ச்சி உண்டா

கிறது. கண்களை மூடினால் ஓர் இருள் உள்ளே தெரிகிறது. புளிச்ச ஏப்பமுண்டாகும்பொழுது உள்ளிருக்கும் ரஸம், கந்தம் இரண்டும் அறியப்படுகின்றன. ஆகையால் இந்திரியங்கள் உள் விஷயங்களையும் உணர்ந்துநின்றன. (8-9)

पञ्चोक्त्यादानगमनविसर्गानन्दकाः क्रियाः ।
कृषिवाणिज्यसेवाद्याः पञ्चस्वन्तर्भवन्ति हि ॥ १० ॥

பஞ்சோக்த்யாதான கமன விஸர்க்கானந்தகா: க்ரியா:
க்ருஷிவாணிஜ்யஸேவாத்யா: பஞ்சஸ்வந்தர்பவந்தி ஹி.

பேசுதல், எடுத்தல், நடத்தல், விடுதல், (மலமூத்திர விஸர்ஜனம்) சுகமனுபவித்தல் என்பவை முக்கியமான ஐந்து செயல்கள். வியவஸாயம், வியாபாரம், பணி செய்தல் முதலியவை இவ்வைந்துகளில் அடங்கினவை. (10)

वाक्पाणिपादपायूपस्थैरक्षैस्तत्क्रियाजनिः ।
मुखादिगोलकेष्वास्ते तत्कर्मेन्द्रियपञ्चकम् ॥ ११ ॥

வாக் பாணி பாத பாயூபஸ்தைரக்ஷைஸ்தத்க்ரியா ஜநி:
முகாதிகோளகேஷ்வாஸ்தே தத் கர்மேந்திரிய பஞ்சகம்.

வாக்கு, கை, கால், குஹ்யேந்திரியங்கள் இரண்டு என்பவை கர்மேந்திரியங்கள். அவைகளால் முற்கூறிய பேச்சு முதலான ஐந்து காரியங்களும் ஏற்படுகின்றன. முகம் முதலிய உருப்புக்களில் இந்த கர்மேந்திரியங்கள் அமைந்துள்ளன. (11)

मनो दशेन्द्रियाध्यक्षं हृत्पद्मगोलके स्थितम् ।
तच्चान्तःकरणं बाह्येष्वस्वातन्त्र्याद्विनेन्द्रियैः ॥ १२ ॥

மனோ தசேந்திரியாத்யக்ஷம் ஹ்ருத்பத்மகோளகே ஸ்திதம்
தச்சாந்த:கரணம் பாஹ்யேஷ்வஸ்வாதந்த்ர்யாத்
விநேந்த்ரியை:

ஞானேந்திரியங்கள் ஐந்திற்கும் கர்மேந்திரியங்கள் ஐந்திற்கும் மனது நாயகனாக இருக்கிறது. அது ஹிருதய கமலமென்ற கோளத்தில் இருக்கிறது. கண் முதலியவைகளின் உதவியின்றி மனதிற்கு வெளிப்பொருள்களுடன் ஸம்பந்தம்

உலகில் ஒரு பொருளை நாம் அறிந்துகொள்ள வேண்டுமானால் கண், காது முதலான இந்திரியங்களின் உதவி வேண்டும். கண்ணால் பார்க்கவேண்டுமானால் ஸூர்யன், சந்திரன், தீபம் முதலான ஒளிமயப் பொருள்களின் உதவியும் வேண்டும். இருளில் கண் இருந்தும் பார்க்க முடியாது. ஆகவே ஸூர்யனோ, சந்திரனோ, தீபமோ, பொருள்களை நமக்கு விளங்கவைப்பதாகவும், அந்த ஒளிப் பொருள்கள் தானே விளங்குவதாகவும் நாம் எண்ணுகிறோம். இது தவறு. உலகில் ஒளியுள்ள பொருள் சேதனமான ப்ரஹ்மம் ஒன்றே. அதுதான் எல்லாவற்றையும் விளங்கவைக்கிறது. அது எங்கும் பரவியுள்ளது. அதன் சிதம்சத்தைக் கொண்டுதான் நாம் பொருள்களை அறிந்துகொள்கிறோம். பொருள்கள் நமக்கு விளங்குவதும் அந்த சித்தால்தான். ப்ரஹ்ம சைதன்யமில்லாவிடில் ஒருபொருளும் விளங்காது; நாம் அறிந்துகொள்ளவும் முடியாது. ஒளியைக் கொடுக்கும் ஸூர்யன் முதலானவையும் ப்ரஹ்ம சைதன்யத்தால்தான், தான் விளங்கிக்கொண்டு மற்றதையும் பிரகாசப்படுத்துகின்றன. கண், காது முதலான இந்திரியங்களும் சைதன்ய ஜ்யோதிஸ்ஸின் உதவியால்தான் வெளிப்பொருள்களை நமக்குக் காட்டுகின்றன. ஆகவே ஸூரியன், சந்திரன் முதலான ஒளியுள்ள பொருள்களின் இருப்பையே எந்த ப்ரஹ்ம சைதன்யம் விளக்குகிறதோ, அந்த சைதன்யத்தை இவை எப்படி பிரகாசப்படுத்தமுடியும்? ஆகையால் ஒளியுள்ளதாயிருந்தாலும் ஸூரியன், சந்திரன் முதலியவைகளாலும், இந்திரியங்களாலும் பிரஹ்மத்தை அறிந்துகொள்ளமுடியாது. (61)

(அ) ஸூர்யன், சந்திரன் முதலானவை தன் கிரணத்துடன் ஸம்பந்தப்பட்ட பொருள்களைத்தான் பிரகாசப்படுத்துகிறது. அதுபோல ப்ரஹ்மமும் அதனுடன் ஸம்பந்தப்பட்ட பொருள்களைத்தானே பிரகாசப்படுத்தும்! எல்லாவற்றையும் எப்படி விளக்கமுடியும் எனில் கூறுகிறார்:—

स्वयमन्तर्बहिर्व्याप्य भासयन्नखिलं जगत् ।
ब्रह्म प्रकाशते वह्निः प्रतप्तायसपिण्डवत् ॥ ६२ ॥

**ஸ்வயமந்தர் பஹிர் வ்யாப்ய பாஸயந்நகிலம் ஜகத் ।
ப்ரஹ்ம ப்ரகாஶதே வஹ்நி: ப்ரதப்தாயஸ பிண்டவத் ॥**

பழுக்கக் காய்ச்சின இரும்பில் நெருப்பு உள்ளும் புறமும் பரவியிருப்பது போல, ப்ரஹ்மம் உலகமெல்லாவற்றிலும் உள்ளும் வெளியும் பரவி இருந்துகொண்டு எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துவதுடன் தானும் பிரகாசிக்கிறது.

எங்கும் நிறைந்த ஆகாசத்திற்கும் காரணமான பிரஹ்மம் இல்லாத இடம் கிடையாது. அது எங்கும் உள்ளது. ஆகவே எல்லாப் பொருள்களிலும் உள்ளும் வெளியும் ப்ரஹ்மம் நின்று அதனுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால் அதனால்தான் எல்லாம் பிரகாசிக்கின்றன. எல்லாவற்றையும் பிரகாசப்படுத்தும் ப்ரஹ்மத்தை வேறு ஒன்றும் பிரகாசப்படுத்துவதில்லை. அது ஸ்வயம்பிரகாசம், தானகவே தான் பிரகாசிக்கிறது. நெருப்பில் காய்ச்சிய இரும்பு உருண்டையை கவனியாமல் கையால் தொட்டு விட்டான். கையில் நெருப்புக்காயம் ஏற்பட்டு விட்டது. பிறரிடம் இரும்பு சுட்டு விட்டது என்று சொல்கிருன். இது தவறு. இரும்புக்குச் சுடும் சக்தி கிடையாது. நெருப்புக்குத்தான் அந்த சக்தியுண்டு. நெருப்பு இரும்பு முழுவதும் பரவியுள்ளதால் இரும்பு சுடுகிறது என்று சொல்கிருேம். அது போல் எல்லா இடங்களிலும் பரவியுள்ள ப்ரஹ்மம்தான், எங்கும் தானும் பிரகாசித்துக்கொண்டு மற்றதையும் பிரகாசப்படுத்துகிறது. இதையறியாமல் ஸூர்யன் முதலானவர்கள் தானே பிரகாசிப்பதாகவும், மற்றதை பிரகாசப் படுத்துவதாகவும் சொல்கிருேம். (62)

(அ) எல்லாவிடங்களிலும் எல்லாமாகவும் ப்ரஹ்மம் இருக்குமானல் ப்ரஹ்மத்தை அறிய ஏன் இவ்வளவு கஷ்டம்? உலகப்பொருள்களைத் தெரிந்துகொண்டே ப்ரஹ்மத்தை அறிந்துவிடலாமே எனில் கூறுகிருர்:—

**जगद्विलक्षणं ब्रह्म ब्रह्मणोऽन्यन्न किञ्चन ।
ब्रह्मान्यद्भाति चेन्मिथ्या यथा मरुमरीचिका ॥ ६३ ॥**

**ஜகத் விலக்ஷணம் ப்ரஹ்ம ப்ரஹ்மணோந்யத் ந கிஞ்சன ।
ப்ரஹ்மாந்யத் பாதி சேத் மித்யா யதா மருமரீசிகா ॥**

உலகத்தைக்காட்டிலும் ப்ரஹ்மம் வேருன லக்ஷணமுடையது. ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேருன பொருள் ஒன்றும் கிடையாது. ப்ரஹ்மத்தைவிட வேருகத் தோன்றுமேயானுல் அது கானல்நீர்போல பொய்யானது.

எல்லாவிடங்களிலும் ப்ரஹ்மம் இருக்கிறது என்பது உண்மை. ஆனுல் உலகமே ப்ரஹ்மமல்ல. உலகம் ஸ்திரமில்லாதது, ஜடம், அறிவற்றது. துக்கத்தைக் கொடுக்கக் கூடியது. ப்ரஹ்மமோ ஸத் (எப்பொழுதும் இருப்பது), அறிவு ஸ்வரூபம், ஆனந்தரூபம். ஆகையால் ஜகத் ப்ரஹ்மமல்ல. '**जगद्विलक्षणं ब्रह्म**' ஆகவே உலகத்தை அறிந்து கொள்வதால் ப்ரஹ்மத்தை அறியமுடியாது.

உலகத்தைக்காட்டிலும் ப்ரஹ்மம் விலக்ஷணமானுல் "இந்த உலகமெல்லாம் ப்ரஹ்மம்தான்" என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றனவே! அதன் கருத்தென்னவெனில், '**ब्रह्मणोऽन्यन्न विद्यते**'. அந்த உபநிஷத்துக்கள் ப்ரஹ்மமும் உலகும் ஒன்று என்று கூறவில்லை. ப்ரஹ்மத்தைவிட உலகம் வேருக இல்லை. அதாவது எங்கும் ப்ரஹ்மம்தான் உளது. வேறு பொருள் ஒன்றும் கிடையாது என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன. 'அத்வைதம்' என்ற பதத்திற்கும் த்வைதப்ரபஞ்சம் இல்லையென்பதுதான் பொருள். பாமதீகாரரும் '**न खलु अनन्यत्वमिति अभेदं ब्रूमः, किं तु भेदं व्यासेधामः**' ('**तदनन्यत्वं**' ததநந்யத்வம் என்ற ப்ரஹ்மஸூத்ர பதத்தால் பிரபஞ்சமும் ப்ரஹ்மமும் ஒன்று என்று சொல்லவில்லை. ப்ரஹ்மத்தைவிட வேருக பிரபஞ்சம் கிடையாது என்றுதான் கூறுகிருேம்) என்று சொல்கிருர். ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேருக பிரபஞ்சமில்லையானுல் அது நம் புலன்களுக்கு எப்படித் தோன்றும்? ப்ரஹ்மம் நமக்குத் தெரியவில்லை. ஆனுல் பிரபஞ்சம் நமக்குத் தெரிகிறது. இந்த பிரபஞ்சத்தை எப்படி இல்லையென்று கூறமுடியும் எனில், "**ब्रह्मान्यद्भाति चेन्मिथ्या यथा मरुमरीचिका**" பிரபஞ்சத்தை

அடியோடு இல்லையென்று கூறவில்லை. அது வாஸ்தவமாக இல்லை என்றுதான் சாஸ்திரம் கூறுகிறது. அதாவது பிரபஞ்சம் பொய். பொய்யான வஸ்துக்கள் உலகில் தோன்றுவதை நாம் பார்த்திருக்கிறோம். கடும் கோடையில் நடுப்பகல் வெயிலில் காட்டில் அகப்பட்டுக்கொண்ட மனிதன் தாகமடைந்து கானலைப் பார்த்து நீர் என எண்ணி விரைகின்றான். உண்மையில்அங்கு நீர் இல்லாவிட்டாலும் அவன் கண்களுக்கு கானல் மறைந்து நீர்தான் தோன்றுகிறது. ஒருநாளும் கானல் நீர் ஆக முடியாது. இதுபோல் ப்ரஹ்மம் ஒன்றுதான் உண்மைப் பொருள். அது ஒருநாளும் பொய்யான பிரபஞ்சமாக ஆகமுடியாது. அது தெரியாமல் மறைந்துவிட்டதால் பலவகைப் பிரபஞ்சம் தோன்றுகிறது. தோன்றும் இவை எல்லாம் பொய் என்பதுதான் தீர்மானம்.

(அ) முன் சுலோகத்தில் சொன்ன விஷயத்தை விவரித்துக் கூறுகிறார் :—

दृश्यते श्रूयते यद्यत् ब्रह्मणोऽन्यन्न तद्भवेत् ।
तत्त्वज्ञानाच्च तद्ब्रह्म सच्चिदानन्दमद्वयम् ॥ ६४ ॥

த்ருஶ்யதே ஶ்ரூயதே யத்யத் ப்ரஹ்மணோऽந்யந் ந தத் பவேத் ।
தத்வஞானச்ச தத் ப்ரஹ்ம ஸச்சிதாநந்தமத்வயம் ।

எதெது பார்க்கப்படுகிறதோ, கேட்கப்படுகிறதோ, அதெல்லாம் பிரஹ்மத்தைக் காட்டிலும் வேறாக இல்லை. தத்வ ஞானத்தால் (எல்லாம்) ஸச்சிதானந்தமாயும் இரண்டற்றதாயுமுள்ள அந்த ப்ரஹ்மமாகத் தெரிகிறது.

உலகில் கண்ணால் பார்க்கப்படுவதும், காதால் கேட்கப்படுவதும், வாக்கால் சொல்லப்படுவதும், மனதால் நினைக்கப்படுவதும் இன்னும் மற்ற இந்திரியங்களால் அறியப்படுவதுமான பொருள்கள் எல்லாம் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறான உண்மைப் பொருள்களல்ல. ப்ரஹ்மம் ஒரு இந்திரியத்தாலும் அறியமுடியாத பொருளாதலால் இவைகளே ப்ரஹ்மமென்றும் கூறமுடியாது. ஆகவே அக்ஞான நிலையில் உண்மை விளங்காததால் நமக்கு

குறிப்புகள்

சிருங்ககிரி ஸ்ரீ ஜகத்குரு மஹாஸம்ஸ்தானம் நவராத்திரி வைபவம்.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள ஸ்ரீ வைத்தி சுப்பிரமண்ய ஐயர் அவர்கள் கிருஹமாகிய 'நவ்ஸுஜா' வில் சிருங்ககிரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்கள் இவ்வருஷத்திய நவராத்திரி மஹோத்ஸவத்தை மிகவும் விமரிசையாக நடத்தினார்கள். ஸ்ரீ மஹாஸ்வாமிகள் தங்குவதற்கும் எல்லா வைபவங்களும் நடைபெறுவதற்கும் வேண்டிய விரிவான ஏற்பாடுகள் ஸ்ரீ வைத்திசுப்ரமண்ய ஐயர் அவர்களால் செய்யப்பட்டிருந்தன. இந்திரலோகம் போன்ற அமைப்பு. ஒரே ஸமயத்தில் பல்லாயிரம் பேர்கள் இருந்து தர்சிப்பதற்கான கண்கவர் பந்தல். அதில் வெகு அலங்காரமாகப் பல வர்ணங்களில் பல மனங்கவர் உருவங்களில் அமைக்கப்பட்டிருந்த மின் விளக்குகள் இரவில் அந்த இடத்தைப் பராசக்தியின் வாஸஸ்தலமாகிய ஸ்ரீபுரமாகவே ஆக்கிவிட்டன. இந்த மின்விளக்குக் கைங்கர்யம் செய்து பேறு பெற்றவர் "சேதுராமன் தியாகராஜன் கம்பெனி" என்ற மின்சார ஸம்பந்தமான கான்ட்ராக்ட் கம்பெனியின் சொந்தக்காரரான ஸ்ரீ N. S. சேதுராமன் (Electrical Engineer) அவர்கள்.

நவராத்திரிக்கு முதல்நாள் 20உ ஸ்ரீ சாரதாம்பாளுக்கு சதருத்ராபிஷேகம் நடைபெற்றது. 21உ முதல் 29உ முடிய நவராத்திரி 9 தினங்களிலும் காலையில் ஸ்ரீ சந்திரமௌளீசுவரர் ஸ்ரீ சாரதாம்பாள் பூஜை, ஏகாதச ருத்ராபிஷேகம், நவாவரண ஸ்ரீ சக்ரபூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனைகள், வேத — பாஷ்ய — நவாஹ ராமாயண பாராயணங்களும், மத்யானம் ஸ்ரீ மஹா ஸந்நிதானம் ஸ்ரீ சாரதா பூஜை, ஸுவாஸினீ பூஜை, (நாராயணி அம்மாள் கல்யாண மண்டபத்தில்) ஸமாராதனைகளும், மாலை 5 மணிக்கு காருகுறிச்சி ஸ்ரீ ராமனாத சாஸ்திரிகள் ராமாயண உபந்யாஸமும், இரவு கீரனூர் ஸ்ரீ நடராஜ

சுந்தரம் — நாதஸ்வரம், ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் பூஜை, ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் தர்பார், ஸங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன. 25ஹ முதல் 29ஹ முடிய சண்டீ பாராயணமும் கடைசி நாளில் சதசண்டீஹோமமும் பூர்ணாஹுதியும் நடந்து ஸுவாஸினீ பூஜையும் கன்யகா பூஜையும் நடைபெற்றன. அன்று மாலை அண்ணாமலைபுரம் தெருக்களில் தங்கப் பல்லக்கில் ஸ்ரீ சாரதாம்பாள் மூர்த்தி ஊர்வலம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

நவராத்திரி முழுவதும் ஒவ்வொரு நாளும் காலை 7-30 முதல் இரவு 11 மணி வரையில் பந்தலில் கூட்டம் ஜே ஜே என்று நிறைந்தபடியே இருந்தது. ஸ்ரீ மஹா ஸ்வாமிகளையும், அவர்கள் செய்த பூஜையையும் மற்ற வைபவங்களையும் கண்குளிரக் கண்டு தீர்த்தமும் பிரஸாதமும் பெற்றுச் சென்றவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் ஏழு அல்லது எட்டு ஆயிரத்துக்குக் குறையாது.

ஒவ்வொரு நாள் இரவும் 9-30 மணிக்கு ஸ்ரீ மஹா ஸந்நிதானம் ராஜ உடையும் கிரீடமும் தரித்து ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து தம் பரிவாரங்களோடு தர்பார்த் திருக்கோலம் காட்டிய காட்சி கண்கொள்ளவில்லை. இந்தக் காட்சியைக் கண்டு அநுபவிக்க ஒவ்வோர் இரவும் பல்லாயிரம் மக்கள் வந்தார்கள். நவராத்திரி தினங்களில் பல்லாயிரம் பேர்களுக்கு அன்னதானமும் வஸ்திரதானமும் நடந்தது. ஸுவாஸினீ பூஜையும் அவர்களுக்கு புடவைகளும் வழங்கப்பட்டன. பத்து நாட்களிலும் அடியிற்கண்ட பிரபல ஸங்கீத வித்வான்கள் ப்ரதி தினமும் தர்பார்சமயம் இன்னிசைக் கைங்கர்யம் நடத்தினர்.

1. K. V. நாராயணசாமி - பாட்டு, திருவாலங்காடு சுந்தரேச அய்யர் - வயலின், பழனி சுப்ரமண்ய பிள்ளை - மிருதங்கம்; 2. ராமநாதபுரம் கிருஷ்ணன் - பாட்டு, திருப்பாற்கடல் வீரராகவன் - வயலின், ராகவன் - மிருதங்கம்; 3. அரியக்குடி ராமாநுஜய்யங்கார் - பாட்டு, பாப்பா வெங்கடராமய்யர் - வயலின், முருகபூபதி - மிருதங்கம்; 4. செம்பை வைத்யநாத பாகவதர் - பாட்டு, சௌடய்யா - வயலின், பாலக்காட்டு மணி அய்யர் - மிருதங்கம்; 5. ஆலத்தூர் சகோதரர்கள் - பாட்டு, T. N. கிருஷ்ணன் - வயலின், சிவராமன் - மிருதங்கம்; 6. மதுரை மணி அய்யர் - பாட்டு, கோவிந்தசாமி நாயக்கர் - வயலின், கோயம்புத்தூர் ராமஸ்வாமி - மிருதங்கம்; 7. G. N. பாலஸுப்ரமண்யம் - பாட்டு, லால்குடி ஜயராமன் - வயலின், நாகர்கோவில் கணேசன் - மிருதங்கம்; 8. காருகுறிச்சி அருணாசலம் - நாதஸ்வரம்; 9. வாலட்டி வெங்கடேச்வரலு - பாட்டு, ஸேதுராமய்யா - வயலின், கிருஷ்ண அய்யங்கார் - மிருதங்கம் 10. முசிரி சுப்ரமண்யய்யர் - பாட்டு R. K. வெங்கடராம சாஸ்திரி - வயலின், காரைக்குடி முத்து அய்யர் - மிருதங்கம்

29ஹயன்று இரவு தர்பார் சமயத்தில் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் 'நவராத்ரியின் பெருமை'யைப் பற்றியும், அப்பொழுது ஸ்ரீ தேவியைப் பூஜிப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும், உபந்யாஸம் செய்தார்கள். ஸாதாரண தினங்களில் பூஜை செய்வதால் ஏற்படும் பலன்களைக் காட்டிலும் நவராத்திரி போன்ற விசேஷ தினங்களில் பூஜை செய்வதால் விசேஷ பலன்கள் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். பிறகு ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பின் கண்டவர்களுக்குப் பட்டங்கள் வழங்கி ஆசீர்வாதம் செய்தார்கள்.

1. ஆசிரியர் "ஸ்ரீ சங்கர க்ருபா" — **குருபக்தரத்னம்**
2. பேராசிரியர் ஸ்ரீ K. பஞ்சாபகேச அய்யர் — **கீதாலங்கார**
3. மஹாமஹோபாத்யாய ஸ்ரீ K. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் — **வியாகரணாலங்கார**
4. காருகுறிச்சி ஸ்ரீ ராமநாத சாஸ்திரிகள் — **பாகவதரத்னம்**
5. பெரியகுளம் அய்யா வாத்யார் என்ற ஸ்ரீ வைத்தீசுவர தீக்ஷிதர் — **வேதக்ஞபோஷக**

[**குறிப்பு**:— தான் வேதத்தை முழுவதும் அத்யயனம் செய்திருப்பதோடு பலருக்கும் வேதத்தைக் கற்பித்து வேதத்தையும் வேதவித்துக்களையும் வளர்ப்பவர் என்பது 'வேதக்ஞபோஷகர்' என்பதன் பொருள்].

மைசூர், பரோடா, தர்பங்கா, திருவாங்கூர் மஹாராஜாக்களும், பர்த்வான் ராஜ மாதாவும் நவராத்திரிக் காணிக்கை அனுப்பிப் பேறு பெற்றார்கள்.

நவராத்திரி உத்ஸவத்தில் கலந்துகொண்டு சங்கீத ஸேவை செய்து பேறுபெற்ற வித்வான்கள் எல்லோருக்கும் விலையுயர்ந்த தங்கமெடல்களும், பொன்னாடையும் கொடுப்பதாக ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அருள் உள்ளம் பாலித்திருக்கிறார்கள். ஸங்கீத வித்வான்களில் பிடில் வித்வான் ஸ்ரீ சௌடையா அவர்களுக்கும், ஆலத்தூர் ஸஹோதரர்கள் ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாஸய்யர், சுப்பு என்ற சிவசுப்ரமண்யய்யர் இவ்விருவர்களுக்கும் '**ஸங்கீதரத்னம்**' என்ற பட்டத்தையும், காருகுறிச்சி ஸ்ரீ அருணாசலம் அவர்களுக்கு '**லயவாத்யபூஷணம்**' என்ற பட்டத்தையும் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வழங்கி ஆசீர்வதித்தார்கள். 30உ விஜயதசமியன்று காலையில் லலிதா ஹோமம் ஆரம்பமாகி ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் விஜயம் செய்து பூர்ணாஹுதியோடு மங்களகரமாக முடிவுபெற்றது.

ஸ்ரீ ஜகத்குரு ஆராதனா மஹோத்ஸவம்.

19உ முதல் 21உ முடிய மூன்று நாட்களிலும் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் தம் குருநாதராகிய ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹா ஸ்வாமிகளின் ஆராதனையை வெகு விமரிசையாக நடத்தினார்கள். ஆராதனையின் முக்கிய வைபவம் 20உ மஹாளய அமாவாஸையன்று நடைபெற்றது.

உபந்யாஸங்கள்.

நவராத்திரிக்கு முன்னால் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் சனி ஞாயிறு தோறும் அண்ணாமலைபுரத்தில் உபந்யாஸம் செய்துவந்தார்கள். பேராசிரியர் 'வித்யாலங்கார' ஸ்ரீ K பஞ்சாபகேசன் அவர்கள் பூஜாஸமயத்தில் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் ஸந்நிதியில் கீதையைப் பற்றிய இரண்டாவது உபந்யாசத்தை நடத்தினார்கள். 'பாகவத ரத்னம்' காருகுறிச்சி ஸ்ரீ ராமனாத சாஸ்திரிகள் ஸ்ரீ சங்கர விஜய உபந்யாஸத்தைத் தொடர்ந்து செய்தார்கள். ஸ்ரீ P. S. கிருஷ்ணன் அவர்கள் "விவேக சூடாமணி"யையும் ஸ்ரீ சுகப்ரஹ்மம் அவர்கள் புராண இதிகாச விஷயங்களையும் உபந்யாஸம் செய்தார்கள். மைஸூர் ஸம்ஸ்தானம் சிவகங்கா

மடாதிபதி ஸ்வாமிகள் சென்னை வந்து ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தை தர்சனம் செய்துகொண்டார்கள்.

ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் 'நவஸுஜா'வில் தங்கியிருந்த காலம் முழுவதிலும் இரவு பகல் என்று பாராமல் தங்கள் ஆஹார நித்திரைகளை லட்சியம்செய்யாமலும் எப்பொழுதும் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் ஏவலில் நின்று, உபசாரங்களிலும், பூஜை முதலிய காரியங்களிலும் எவ்வகைக் குறைவும் வாராமல் கண்ணை இமை காப்பதுபோல் காத்துவந்த ஸ்ரீ வைத்திசுப்ரமணிய ஐயர் தம்பதிகளுக்கு நிச்சயம் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் பூர்ண ஆசீர்வாதம் ஸித்தித்திருக்கும் என்பதில் ஸந்தேஹமேயில்லை.

* * *

மங்களகரமாகவும் பக்தர்கள் மனம் நிறைந்து பொங்கும் படியும் நவராத்திரி மஹோத்ஸவத்தை அண்ணாமலைபுரம் ஸ்ரீ வைத்திசுப்ரமண்ய ஐயர் கிருஹமாகிய 'நவஸுஜா'வில் முடித்துக்கொண்டு ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பரமபக்தர்களாகிய கல்கத்தா ஸ்ரீ T. S. ஸீதாபதி ஸஹோதரர்களின் பக்தி பூர்வகமான அழைப்புக்கு இணங்கி அக்டோபர் 5உ மாலை புறப்பட்டு ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் சாலையிலுள்ள ஸ்ரீ மஹிஷமர்த்தினி ஆலயத்தில் ஸகல மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டு மந்தவெளிப்பாக்கம் IX டிரஸ்டு கிராஸ் ரோடிலுள்ள "கீதா" என்ற ஸதனத்திற்குத் தங்கப் பல்லக்கில் ஊர்வலமாக விஜயம் செய்தார்கள். ஸ்ரீ சங்கர ஸேவா ஸமிதி தலைவர் கல்கத்தா ஸ்ரீ T. S. ஸீதாபதியும் அவர் ஸஹோதரர்களும் நான்கு தினங்கள் வெகு விமரிசையாக பூஜை, குருவந்தனம், அதிதிஸத்காரம் முதலியவைகளை நடத்தினார்கள். அவர்களுக்குக் கிடைத்த பாக்யத்தில் ஸமிதி அங்கத்தினர் எல்லோருக்கும் பெருமிதம் ஏற்பட்டிருக்கிறது.

பிறகு பரமபக்தரும் சிஷ்யருமான ஸ்ரீ K. R. ஸுந்தரம் அய்யரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி 9உ அங்கிருந்து ஆழ்வார்பேட்டை ஸர் தேசிகாசாரிரோடில் ஸ்ரீ K. R ஸுந்தரம் அய்யரவர்கள் கிருஹம் 'கோமதி', ஸ்ரீ K ஈசுவரய்யரவர்கள் கிருஹம் 'ஸுதாமா' இவைகளை ஒட்டி நிர்மாணிக்கப்பட்டிருக்கும் விசித்திரமான மண்டபத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்கு மூன்று நாட்கள் தங்கிவிட்டுப் பிறகு காங்கிரஸ் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அந்தப் பேட்டை வாசிகளை ஆசீர்வதிப்பதற்காக 11உ மாலை அங்கிருந்து காந்தி நகரம்

பிரதிஷ்டை செய்விக்கப்பட்ட ஸ்ரீ ராஜராஜேச்வரிக்கு விசேஷ பூஜைகளுடன் நவராத்திரி மஹோத்ஸவம் பக்தர்களால் அதிவிமரிசையாக கொண்டாடப்பட்டது.

* * *

திருச்சி ஜில்லா மஹாதானபுரம் ஸ்ரீ கமலானந்த நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் வழக்கம் போல் நவம்பர் 19உ முதல் 30உ முடிய ஆராதனை மஹோத்ஸவம் நடைபெறும். 25உ நெலமாவு மடம் ஸ்ரீ கமலானந்த நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகளின் ஆராதனையும் 30உ ஸ்ரீ ராமானந்தஸ்வாமிகளின் ஆராதனையும் நடைபெறுவதுடன் 12 நாட்களிலும் பிரதி தினமும், வேதபாராயணம், லக்ஷார்ச்சனை, ஸந்தர்ப்பணை, வித்வத் ஸதஸ், பிரபல பண்டிதர்களின் உபந்யாஸங்கள் இவையும் நடைபெறும்.

* * *

ஸ்ரீ பகவத்பாதாளின் ஜன்ம ஸ்தலமான காலடியில் வழக்கம்போல நவராத்திரி மஹோத்ஸவம் மிக்க விமரிசையாக நடைபெற்றது. காருகுறிச்சி ஸ்ரீ மஹாதேவய்யர் தம்பதிகள் ஸுவாஸினிகளுக்கு புடவைகள் வாங்கிக் கொடுத்தார்கள். 30உ அன்ன வாஹனத்தில் அம்பாளுக்கு பட்டண ப்ரவேசம் நடத்தப்பட்டது.

* * *

21—9—60 அன்று ஹிந்து அறநிலையங்கள் கமிஷனின் தலைவர் டாக்டர் C. P. ராமஸ்வாமி அய்யர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் காலடிக்கு விஜயம்செய்தார்கள். காலடி ஏஜண்டு ஸ்ரீ K. R. நாராயணய்யர் அவர்கள் எல்லோரையும் வரவேற்றார். ஸ்ரீ C. P. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் தன்கூட வந்திருந்த எல்லோருக்கும் அங்கு எல்லா இடங்களையும் காட்டி காலடி மஹிமை, ஆசார்யாள் அவதாரம், அவாள் சரித்திரம், காலடியில் ஆசார்யாள், சாரதாம்பாள் மூர்த்தி பிரதிஷ்டை செய்து வைத்த சிருங்கேரி மஹா ஸ்வாமிகளின் திவ்ய மஹிமை இவைகளை விளக்கிக் கூறினார்கள்.

இந்த இதழில்

சிருங்ககிரி ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் வர்த்தந்தி ஸமயம் குருவை அனுஸந்தானம் செய்ய 'ஸ்ரீ ஜகத்குரு பஞ்சகம்' இவ்விதழில் ஆரம்பத்தில் வெளியாகியிருக்கிறது. சிவானந்தலஹரீ சுலோகமூலம் 'பக்தியின் பெருமை'யை ஸ்ரீ மஹாஸந்நிதானம் உபதேசிக்கிறார்கள். 'ஸ்ரீ ஸத்குருவின் மஹிமை' என்ற கட்டுரையில் தன் சொந்த மூன்று அனுபவங்கள் மூலம், ஸ்ரீ ஸத்குரு ஸன்மார்க்கத்தை உபதேசிக்கும் ரீதியை மிக அழகாகக் காட்டியிருக்கிறார்கள். 'கீதைக் கடித'த்தில் கருமயோகத்தை நடத்த வேண்டிய முறை, இதை நடத்துபவர்கள், அவர்களின் மனநிலை, இதன் பயன் இவற்றையெல்லாம் விரிவாக ஆராய்ந்து பயனைக் கருதாது நோக்கத்துடன் வழுவாது நாமும் அனுஷ்டிக்க முடியும் என்பதை நன்கு காட்டியிருக்கிறார். "அறிந்தவர்களுக்குத் தெரியாது. அறியாதவர்களுக்குத் தெரியும். ப்ரஹ்மம் அறியப்பட்டதுமல்ல, அறியப்படாததுமல்ல" என்ற கேனோபநிஷத்தி லுள்ள புதிர், ஸம்பாஷணைமூலம் நாடகத்தில் நன்கு துலக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கி. வா. ஜகன்னாதன் அவர்கள் அபிராமி அந்தாதியில் அம்பிகை செந்நிறமுள்ளவள் என்பதைத் தக்க சான்றுடன் நிரூபித்து அபிராமி என்ற சொல்லின் பொருளையும் கூறி, அவள் ஒருத்தியே நம் எல்லோருக்கும் 'விழுத்துணை' (மேலான துணை) என்பதை நன்கு விளக்கியிருக்கிறார். தேவீ பாகவதத்திலுள்ள ஹயக்ரீவ உபாக்யானம் தொடர்ந்து வெளியாகும். ஸூர்தாஸருடைய பக்தியோகத்தை அன்னாரின் ஹிந்துஸ்தானி பத்யங்கள்மூலம் அவைகளின் கருத்தை விளக்கிக் காட்டியிருக்கிறார் ஸ்ரீ T. S. சிவராமலிங்கம் அவர்கள். குரு கிருபா விலாஸத்தில் துறவு வாழ்க்கையில் தனக்கு ருசி ஏற்பட்ட வரலாற்றையும், ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் கருணைக்குப் பாத்திரமானதையும், அவர்கள் உபதேசித்த மானஸபூஜா மஹிமைகளையும் சென்ற இதழில் கூறிவிட்டு இந்த இதழில் அதை விளக்கும் கதையையும் தனக்கு ஏற்பட்ட ஸவிகல்பானுபவத்தையும் காட்டியிருக்கிறார்கள். இதுவும் தொடர்ந்து வெளியாகும். வேத ப்ராமாண்யமும், ஆத்மபோதமும் அடுத்த இதழில் முடிவடையும். இந்த இதழையலங்கரிக்கும் நவராத்திரி வைபவக் காக்ஷிகளின் படங்களை நேர்த்தியான முறையில் தயாரித்துக் கொடுத்துதவிய பரமபக்தரான ஸ்ரீ வைத்தியசுப்ரமண்ய அய்யர் அவர்களுக்கு நமது நன்றி.

Regd. No. M. 7193

ஸ்ரீ சங்கர ஸேவா ஸமிதி வெளியீடு.

॥ श्रीललितात्रिशती ॥

"ஸ்ரீ லலிதா த்ரிசதீ மலர்"

(நாகரியிலும் தமிழிலும் மூலமும் விரிவான தமிழ் உரையுடனும் கூடியது)

ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் ஆசியை முன்னிட்டு இந்த மலர் வெளியாகிறது. ஸ்ரீ சங்கரபகவத்பாதர் அவர்களின் பாஷ்யத்தில் நல்ல ஆராய்ச்சியுள்ள ஸ்ரீ V. ராமையா அவர்கள் இதற்குத் தெளிவான விரிவுரை எழுதியிருக்கிறார்கள். முதல் பாகம் இப்போது தீபாவளி சமயத்தில் வெளியாகும். இரண்டு பாகங்களுக்கும் சேர்ந்து விலை ரூ. 3/- புத்தகம் வேண்டுவோர் ரூ. 3/-ஐயும் அனுப்பினால் இப்பொழுது முதல் பாகம் அவர்களுக்குக் கிடைக்கும். அந்தப் புத்தகத்திற்குள்ளிருக்கும் கூபனைக் கையெழுத்திட்டு அனுப்பினால் இரண்டாம்பாகம் அச்சானவுடன் தபால் செலவில்லாமல் அவர்களுக்கு அனுப்பப்படும். கீழ்க்கண்ட விலாஸத்துக்கு எழுதி முதல் பாகத்தைப் பெற்றுக்கொள்ளலாம். குறைந்த பிரதிகளே அச்சாகியிருப்பதால் விரைவில் ஆர்டர் செய்வது நல்லது.

இரண்டு பாகமும் விலை ரூ. 3

'ஸ்ரீ சங்கர க்ருபா' சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 2-25

(தபாற்கூலி உள்பட)

சந்தாதார்கள் தங்கள் சந்தா எண்ணை எழுதியனுப்பக் கோருகிறோம்.

ரிஜிஸ்டர் தபாலில் அனுப்ப வேண்டுபவர்கள் இரண்டு பாகங்களுக்குமாக ரூ. 1/- அதிகப்படி அனுப்பவேண்டும்.

கிடைக்குமிடம் :—

SRI VANI VILAS PRESS,
SRIRANGAM, TIRUCHY-6.

Printed at the Sri Vani Vilas Press, Srirangam,
Edited and Published by K. R. Venkataraman, for the Akhila Bharata Sankara Seva Samiti.
Manager :— K. Tirumalaisamy Aiyar, B. A., B. L.